# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 30.05.2024 வியாழக்கிழமை இதழ் : 151 பக்கங்கள் : 12







# பசுமை ஐதரசன் விநியோக மத்தியஸ்தானமாக இலங்கை

## சிங்கப்பூர் - இந்தியா - இலங்கை கேபிள் மூலம் இணைப்பதற்கு திட்டம் என்கிறார் ஜனாதிபதி!



கொழும்பு, மே 30

பசுமை ஐதரசன் வளங்கள் எமது நாட்டில் நிறைந்துள்ளன. கடலுக்கு அடியில் உள்ள இந்தியா - சிங்கப்பூர் கேபிளை இலங்கையுடன் இணைக்க வாய்ப்பு உள்ளது. இதனால், பசுமை ஐதரசனை பயன்படுத்தும் பட்சத்தில் வலயத்தின் நீண்டகால விநியோக மத்தியஸ்தானமாக இலங்கை மாறுவதற்கான சாத்தியங்கள் உள்ளன -இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே தரைவழி இணைப்பு குறித்தும் ஆலோசித்து வருகிறோம் என்றும் அவர் கூறினார்.

நிலைபேறான மற்றும் போட்டித்தன்மை கொண்ட பொருளாதாரத்தை உருவாக்க இலங்கை அர்ப்பணிப்புடன் செயல்படுவதாகவும், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி இதில் முக்கிய பங்களிப்பை ஆற்றுவதாகவும் ஜனாதிபதி கூறினார். மின்சார மறுசீரமைப்பு சட்டமூலம் மற்றும் காலநிலை மாற்ற சட்டமூலம் எதிர்காலத்தில் 11

# இந்திய பயங்கரவாத தடுப்பு பொலிஸார் இலங்கை வருவர்!

கொழும்பு, மே 30

ஐ. எஸ். அமைப்பினர் என்ற குற்றச்சாட்டில் இந்தியாவில் கைது செய்யப்பட்ட இலங்கையர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக இந்திய பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸார் இலங்கை வரவுள்ளனர்.

குஜராத் தலைநகர் அகமதாபாத்தில் அண்மையில் இலங்கையை சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ. எஸ். ஐ. எஸ்ஸை சேர்ந்தவர்கள் என்று விசாரணையில் தெரியவந்தது. இதை அடிப்படையாக வைத்து நடத்தப்பட்ட விசாரணையில் இலங்கையில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

எனினும், கைதான ஐ. எஸ். அமைப்பினரை இயக்கினார் என்று கூறப்படும் பிரதான சந்தேக நபரான ஒஸ்மண்ட் ஜெராட் என்பவர் தலைமறைவாகி 11

# கடற்படையினருக்கு காணி; சுழிபுரத்தில் போராட்டம்!

யாழ்ப்பாணம், மே 30

சுழிபுரத்தில் கடற்படையினருக்காக காணி சுவீகரிக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று காலை 9 மணிக்கு போராட்டம் நடைபெறவுள்ளது.

காணி சுவீகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக அனைத்து மக்களையும் ஒன்றிணையுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க. சுகாஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

# நாளை வெளியாகின்றது ஏ. எல். பரீட்சை பெறுபேறு

கொழும்பு, மே 30

2023ஆம் ஆண்டுக்கான க. பொ. த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் நாளை வெள்ளிக்கிழமை வெளியாகும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற இந்தப் பரீட்சைக்கு 2 இலட்சத்து 81 ஆயிரத்து 445 பாடசாலை பரீட்சார்த்திகளும் 65 ஆயிரத்து 531 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுமாக 3 இலட்சத்து 46 ஆயிரத்து 976 பேர் தோற்றியிருந்தனர்.

பரீட்சை பெறுபேறுகள் வெளியானதும் 11

# மாணவர்களை நிர்ப்பந்தித்து ஒரேநாளில் இரு பரீட்சைகள்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 30

வடக்கில் சில பாடசாலைகளில் ஒரே நாளில் வெவ்வேறு பாடங்களுக்கான பரீட்சைகளை எழுதுவதற்கு உயர்தர மாணவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இந்த செயல்பாடு தொடர்பில் மாகாண கல்வி திணைக்களத்துக்கு முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

பாடசாலைகளில் தற்போது 11

# நிறைவேற்றதிகார முறைமையை ஒழிப்பதாக எவரும் கூறவில்லை!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, மே 30

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ள எந்தவொரு வேட்பாளரும் நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதாகக் கூறவில்லை. எனவே, பாராளுமன்றத்தை பலப்படுத்தும் சட்டங்கள் அவசியம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன், நிறைவேற்று ஜனாதிபதி முறைமை சாதக, பாதக அம்சங்களுடன் கூடியதாகவே காணப்படுகின்றது. ஜனாதிபதிக்கு உள்ள நிறைவேற்று அதிகாரத்தினாலேயே 11

# மயிலத்தமடுவில் கால்நடைகள் கொடூரமாக கொல்லப்படுகின்றன!

* 400 மாடுகள் கொல்லப்பட்டன
* 1,400 மாடுகள் உணவின்றி சாவு

கொழும்பு, மே 30

மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரையில் கால்நடைகள் துப்பாக்கியால் சுடப்பட்டும் - உணவில் வெடிபொருள் வைத்தும் - வெட்டியும் கொல்லப்படுகின்றன. இராணுவம், பொலிஸின் துணையுடனேயே இந்த அநீதி செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மயிலத்தமடுவில் 2013ஆம் ஆண்டுவரை தமிழ் மக்கள் பிரச்னையின்றி கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வந்தனர். 2013இல் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டது. அன்றுமுதல் தமிழ் கால்நடை பண்ணையாளர்கள் பிரச்னைகளை எதிர்கொண்டு வருகின்றனர். தமிழரின் நிலம் திட்டமிட்டு ஆக்கிரமிக்கப்படுகின்றது - இவ்வாறு கொழும்பு தேசிய கிறிஸ்தவ சங்கத்தில் நடந்த உரையாடலில் மயிலத்தமடு - மாதவனை பிரச்னை தொடர்பில் கருத்து வெளியிட்ட ஒன்றியத்தின் தலைவர் 11

# கசிப்பு அருந்திய நால்வர் மரணம்

## தம்புள்ளையில் சோகம்

தம்புள்ளை, மே 30

கசிப்பு அருந்திய நால்வர் உயிரிழந்தமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மாத்தளை - தம்புள்ளையில் இந்த மரணங்கள் பதிவாகியுள்ளன.

தம்புள்ளை விகாரை பகுதியில் கசிப்பு அருந்திய இருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தனர். இந்த நிலையில், நேற்று புதன்கிழமையும் அங்கு கசிப்பு அருந்திய இருவர் உயிரிழந்தனர். 11

# வடக்கு அபிவிருத்திக்கு கனடா ஒத்துழைக்கும்!

## கனடா தூதுக்குழுவினர் உறுதி



யாழ்ப்பாணம், மே 30

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு தேவையான ஒத்துழைப்புகள் வழங்கப்படும் என்று கனடாவின் சர்வதேச அபிவிருத்திகளுக்கான பிரதி அமைச்சர் கிறிஸ்தோபர் மக்லெனன் உள்ளிட்ட தூதுக்குழுவினர் வடக்கு ஆளுநரிடம் உறுதியளித்தனர்.

வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். 11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஒருவன் கோயிலுக்கு போனான். கோயில் சுவரில் சிவபெருமான் விக்கிரகம் இருந்ததை கண்டான். அருகில் நின்று கவனித்தான். அதன் கீழே ஒரு கல்வெட்டு இருந்தது. கல்வெட்டு எழுத்துகள் ஒரு மாதிரியாக இருக்கும் - சிலருக்கு ஒன்றுமே புரியாது. இவனுக்கு அந்த எழுத்துகள் தெரியும். அதனால், அதை படித்துப் பார்த்தான்.

"இந்த சிவபெருமானுக்கு எவன் ஒரே சமயத்தில் நூறு குடம் தண்ணீர் அபிஷேகம் செய்கிறானோ, அவனுக்கு ராஜ பதவி கிடைக்கும்..." என்று எழுதி இருந்தது

"அடடா... ராஜ பதவி என்றால் சும்மாவா? ஒரு மந்திரி பதவிக்கே கோடி கோடியாக செலவழித்து அலையாய் அலைகின்றனர். அப்படி இருக்கும்போது, நூறு குடம் தண்ணீர் அபிஷேகம் செய்தால், ராஜ பதவி கிடைக்கிறதே..." என்று எண்ணினான்.

உடனே, ஓடிப் போய் ஒரு குடத்தை எடுத்து பக்கத்திலிருந்த குளத்திலிருந்து தண்ணீர் கொண்டு வந்து, அபிஷேகம் செய்ய ஆரம்பித்தான்.

ஞாபகமாக ஒன்று, ரெண்டு என எண்ணிக் கொண்டே அபிஷேகம் செய்தான். எழுபது, எண்பது, தொண்ணூறு குடம் ஆயிற்று...

"என்னடா இது... 95 குடம் அபிஷேகம் செய்தாயிற்று, ராஜ பதவிக்கான அறிகுறி ஒன்றுமே தெரியவில்லையே! கீரிடத்தை எடுத்துக் கொண்டு யாராவது வருகின்றனரா?" என்று சுற்றும் முற்றும் பார்த்தான். யாரையும் காணோம். இவனுக்கு பொறுமையும் குறைந்தது.

"சரி... எப்படியாவது நூறு குடம் தண்ணீர் அபிஷேகம் செய்து விடுவோம்..." என்று எண்ணி, மறுபடியும் குடத்தில் தண்ணீர் எடுத்து வந்து அபிஷேகம் செய்தான். 96, 97, 98.

ஊஹூம்... ராஜ பதவிக்கான அறிகுறியையே காணோம்.

பொறுமையை இழக்க ஆரம்பித்தான். 99ஆவது குடமும் அபிஷேகமாகி விட்டது. பலன் தெரியவில்லை. பொறுமையை இழந்தான். நூறாவது குடம் தண்ணீர் கொண்டு வந்து, நூறு என்று சொல்லி குடத்தை சிவபெருமான் தலையில் போட்டு உடைத்தான். அவ்வளவுதான், இவன் முன் தோன்றினார் சிவன்.

"பக்தா... நீ நூறு குடம் தண்ணீர் அபிஷேகம் செய்தது குறித்து மகிழ்ந்தேன். ஆனால், பொறுமையை இழந்து, நூறாவது குடத்தை என் மேல் போட்டு உடைத்தது பெரிய அபசாரம். நூறாவது குடத்துத் தண்ணீரையும் பொறுமையுடன் அபிஷேகம் செய்திருந்தால், உனக்கு ராஜ பதவி கிடைக்க ஏற்பாடு செய்திருப்பேன். நீ, கடைசி நேரத்தில் பொறுமையை இழந்து, அபசாரம் செய்து விட்டதால், பொறுமைக்கு அடையாளமாக கழுதையாக ஏழு பிறவி எடுத்து, பின்னர் மனித ஜென்மம் கிடைக்கும் போது மீண்டும் எனக்கு நூறு குடம் தண்ணீர் அபிஷேகம் செய்தால் ராஜ பதவி கிடைக்கும்..." என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்து விட்டார்.

இந்தக் கதையை வட்ஸ்அப்பில் அனுப்பிவைத்த நண்பர் ஒருவர், இதை ஏன் உங்களுக்கு அனுப்பியிருக்கிறேன் என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம் என்றார்.

அவர் ஒரு மூத்த ஊடகவியலாளர். இந்தப் பத்தியில் ஓர் அரசியல்வாதி பற்றி எதையாவது எழுதினால் அதுகுறித்து தனக்கு மனதில் பட்டதை எழுதி குறிப்பாக அனுப்ப அவர் என்றுமே தவறியதில்லை. சொல்லப்போனால், அந்த அரசியல்வாதிமீது அவருக்கு அவ்வளவு நம்பிக்கையும் - அவர்மீது எதிர்பார்ப்பும் இருந்தது.

"எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதனை பொறுமையோடு செய்யவேண்டும் அப்போதுதான் அதன் பயனை அடையலாம் என்றுதானே சொல்லவருகிறீர்கள்?" என்று பதில் அனுப்பினேன்.

"அது எந்தக் குழந்தைக்கும் தெரிந்ததுதான், இந்தப் பதிலை உங்களிடமிருந்து அறியவா இதனை உங்களுக்கு அனுப்பினேன்?" என்று பதில் கேள்வி கேட்டிருந்தார்.

"எனக்கு புரிந்தது அவ்வளவுதான். சரி நீங்கள் என்ன புரிந்து கொண்டீர்கள் என்பதை சொல்லுங்களேன்" என்று பதில் அனுப்பினேன்.

"தமிழ் அரசு கட்சிக்கு அந்த இருவருமே ஒரே காலத்தில் வந்தவர்கள்தான். அதில் எவர் ஒருவர் கட்சிக்கு தலைவராக வந்திருந்தாலும் அவர் கட்சி யாப்பின்படி இரண்டு வருடங்களுக்கு தலைவராக இருந்திருப்பார். அதற்கு பின்னர் மீண்டும் தெரிவு நடந்திருக்கும். முதலில் தெரிவாகி தலைவரானவர் கட்சியை நன்றாக வழி நடத்தி, கட்சிக்கு நன்மைகள் கிடைத்திருந்தால் - வேண்டுமானால் இன்னுமொரு தடவை சந்தர்ப்பம் கொடுத்திருக்கலாம். அதனால் கட்சி நன்மையடைந்தால், கட்சியில் இருக்கின்ற மற்றவர்கள் மாத்திரமல்ல தமிழ் மக்களும் நன்மையடைந்திருப்பார்கள். மாறாக, அவர் சிறப்பாக தலைமைப் பதவியை வகிக்கவில்லை என்றால் அடுத்த தடவை மற்றையவர் வந்திருக்கலாம். இரண்டு ஆண்டுகளில் அவரின் தலைமை சிறப்பாக இல்லை என்றாலும் அதனால் கட்சி குடிமுழுகிப் போய் விடப் போவதில்லைதானே. இப்போது பத்து வருடங்களில் என்ன வளர்ச்சியையா கண்டுவிட்டது?" என்று நீண்ட விளக்கத்தை அனுப்பியிருந்தார் நண்பர்.

"நல்ல கருத்துத்தான், அதனை உங்கள் அபிமானத்துக்குரிய அந்தத் தலைவருக்கே அனுப்பி விடுங்களேன்" என்றேன் நான்.

இப்போதெல்லாம் யாரைக் கண்டாலும் இது பற்றித்தான் பேசுகிறார்கள். எப்படி இந்தப் பிரச்னைக்கு தீர்வைக் காணலாம் என்பதிலும் - அதற்கு தாங்கள் எப்படி உதவலாம் என்பதிலும் தான் அக்கறையோடு இருக்கின்றரெனத் தெரிகின்றது. என்ன இருந்தாலும், தலைவர் தெரிவு நடந்த போதே கட்சியின் பொதுச் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை விடயத்தில் இருந்த "சிக்கல்" இரு தரப்பினருக்கும் தெரிந்தே இருந்தது. அதிலும் குறிப்பாக சுமந்திரன் பின்னர் எழுதிய பகிரங்க கடிதத்திலும் அதனைக் குறிப்பிட்டிருந்தார்.

அப்படியிருக்கையில், அதனைத் தெரிந்துகொண்டு, தேர்தலுக்கு சென்றவர் தேர்தல் முடிவை ஏற்றுக்கொள்வதுதான் ஏற்புடையது. ஒருவர் தலைவராகத் தெரிவாகி விட்டபின்னர், அவர் தனக்கு பொருத்தமானவர் ஒருவரை கட்சி செயலாளராக நியமித்து கட்சியை வழி நடத்துவதுதான் சிறந்தது என்ற எனது கருத்தையும் அவர் ஏற்றுக்கொண்டுவிட்டு விடை பெற்றார்.

- ஊர்க்குருவி

## யாழ். போதனாவில் அவசர சிகிச்சை பிரிவின் 5ஆம் ஆண்டு நிறைவுவிழா!

யாழ்ப்பாணம், மே 30

யாழ். போதனா மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவின் ஐந்தாம் வருட விழா நிறைவு நிகழ்வு நேற்றுக் கொண்டாப்பட்டது.

விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவானது ஆரம்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் பூர்த்தி செய்யப்பட்டதை ஒட்டி கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

நிகழ்வில் வடமாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ், வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சமன் பத்திரண, யாழ். மாவட்டபதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, யாழ். மருத்துவ சங்கத் தலைவர் சுதர்சன், அரச மருத்துவ சங்கத்தின் உப தலைவர் சத்திர சிகிச்சை நிபுணர் எஸ். மதிவாணன், மருத்துவ நிபுணர்கள், தாதிய பயிற்சி கல்லூரி அதிபர் மற்றும் தாதியர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.



இதன் போது உரையாற்றிய யாழ்ப்பாண போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி,

தற்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையை தேசிய மருத்துவமனையாக தரமுயர்த்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் மருத்துவமனை தொடர்பில் பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

மருத்துவமனையை கோயிலைப் போல் பயன்படுத்த வேண்டும். இவை பொது மக்களுக்கு சேவை வழங்கும் ஓர் இடமென்பதை அனைவரும் மனதில் கொண்டு செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

## கசினோவுக்கு அடிமையான நபர் வங்கிகளை உடைத்து கொள்ளை

கொழும்பு, மே 30

இரண்டு கூட்டுறவு கிராமிய வங்கிகளை உடைத்து பல கோடி ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பெருந்தொகை பணம் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



வென்னப்புவ, அங்கம்பிட்டி பகுதியிலுள்ள கூட்டுறவு கிராமிய வங்கியில் 6 கோடி ரூபாய் பெறுமதியான தங்க ஆபரணங்கள் மற்றும் பணத்தையும் ஜா- எல, கனுவான பகுதியிலுள்ள கூட்டுறவு கிராமிய வங்கியிலிருந்து 2 கோடி ரூபாய் பெறுமதியான தங்க ஆபரணங்கள் மற்றும் பணத்தையும் சந்தேகநபர் திருடியுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் பிலியந்தலை மடபாத்த பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் எனவும், கசினோ விளையாட்டுக்கு அடிமையான நிலையில் குறித்த நபர் குற்றச்செயல்களில் ஈடுபடுவதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

அத்தோடு, திருடப்பட்ட தங்க ஆபரணங்களை விற்பனை செய்து கிடைத்த பணத்தில் களியாட்ட விடுதிகளுக்குச் சென்று கசினோ விளையாடியதாக சந்தேக நபர் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

மேலும், திருடிய பணத்தில் வென்னப்புவ பகுதியிலுள்ள நபரிடமிருந்து கார் ஒன்றை வாங்கியதாகவும் விசாரணைகளில் கண்டறிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## வதிரி பூவற்கரை பிள்ளையார் ஆலய சங்காபிசேகம் சிறப்பாக நடைபெற்றது

வடமராட்சி, மே 30

வதிரி பூவற்கரை பிள்ளையார் ஆலய மணவாளக் கோல உற்சவ 1008 சங்காபிசேகம் நேற்று புதன்கிழமை வெகுசிறப்பாக நடைபெற்றது.

காலை 6 மணிக்கு விநாயக வழிபாட்டுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் புண்ணியவாசனம், விசேட திரவிய ஹோமம், தீபாரதனை, வேததோத்திர திருமுறை பாராணயம், ஆசிர்வாதம் கும்பபிரதட்சணம் என்பன நடைபெற்று முற்பகல் 11 மணிக்கு விசேட அபிசேகம் நடைபெற்றது.



இதனைத் தொடர்ந்து வசந்த மண்டப பூசை நடைபெற்று விநாயகப் பெருமான் உள்வீதி, வெளிவீதி வலம் வந்ததுடன் கிராம வலமும் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். (ஐ-02)

## யாழ். மாநகரில் நுளம்பு கட்டுப்பாட்டு வார நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 30

டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்தும் விதமாக யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் இன்று வியாழக்கிழமை முதல் விசேட நுளம்பு கட்டுப்பாட்டு நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நாளை ஆரம்பிக்கும் இந்த நிகழ்வு எதிர்வரும் ஜூன் 1ஆம் திகதிவரை மேற்கொள்ளப்படவுள்ள இந்த நிகழ்வுக்கு அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை கேட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் வீடுகள், அரச - தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், மண்டபங்கள், ஆலயங்கள், பொது சந்தைகள், மயானங்களில் டெங்கு பரவும் சூழல் குறித்து பரிசோதிக்கப்படவுள்ளது. அத்துடன், டெங்கு பரவும் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 30.05.2024 வியாழக்கிழமை ඊළනාඩු
குரோதி வருடம், வைகாசி 17

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மும்முனை போட்டியில் தமிழரின் வாக்குகள்?

தென்பகுதி தேர்தல் களம் கொதிநிலையடைந்து வருகின்றது. மும்முனை போட்டிக்கான வாய்ப்பே அதிகம் தென்படுகின்றது. இவ்வாறானதொரு சூழலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான கூட்டிணைவு தொடர்பிலும் உரையாடல்கள் நடைபெறுகின்றன என்று நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், இதன் சாத்தியமின்மை தொடர்பான தகவல்களும் சமநிலையில் வெளிவருகின்றன. எவ்வாறெனினும், தேசிய மக்கள் சக்தியின் செல்வாக்கு அதிகரித்துவரும் நிலையில் பிரதான இரண்டு போட்டியாளர்களின் ஒன்றிணைவு கட்டாயம் என்றும் அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. அரசியலில் எதிரிக்கு எதிரி நண்பன் என்னும் கூற்று உண்டு. அதற்கு அமையவே விடயங்கள் இடம்பெறும்.

தற்போதைய நிலையில் சஜித் மற்றும் அநுரவே பிரதான போட்டியாளர்களாக இருக்கின்றனர். இந்த நிலையில், ரணிலின் வியூகங்கள் எவ்வாறு அமையும் என்பதே கேள்வியாகும். ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்தவரையில் அவரின் திறமை தொடர்பில் அனைவருமே அறிவர். எனினும், அவரின் அரசியல் வாழ்வில் ஒருமுறைகூட, மக்கள் ஆணையுடன் ஜனாதிபதியாக முடியவில்லை.

2005இல் அதற்கான வாய்ப்பு கிடைத்த போதிலும்கூட தமிழ் மக்களின் தேர்தல் பகிஷ்கரிப்பால் அது சாத்தியப்படாமல் போய்விட்டது. இவ்வாறானதொரு சூழலில் இது அவருக்கான கடைசி சந்தர்ப்பம். இந்த சந்தர்ப்பத்தை தக்கவைத்துக்கொள்ள அவர் எவ்வாறான உத்திகளையும் கையாளக்கூடும். இவ்வாறானதொரு சூழலில்தான் ரணில் - சஜித் இணைவின் ஊடாக இலகுவாக அதிகாரத்தை கைப்பற்ற முடியுமென்னும் வியூகம் தொடர்பில் சிந்திக்கப்படுகின்றது.

ஒருவேளை இது நடைபெற முடியாது போனால் மும்முனை போட்டி நிச்சயமானது. இந்த மும்முனை போட்டியில் தமிழ் மக்களின் வாக்குகள் தீர்மானகரமான இடத்தை வகிக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், இதனை தமிழ் மக்கள் எவ்வாறு கையாளப் போகின்றனர் என்பதுதான் கேள்வியாக இருக்கின்றது. தமிழர் தரப்புகளால் அது முடியுமா என்பது இன்னொரு கேள்வி.

தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதன் ஊடாக விடயங்களை கையாள முடியுமென்னும் அடிப்படையில்தான் விடயங்கள் இதுவரையில் கையாளப்பட்டுவந்தன. எனினும், அனைத்து கட்சிகளும் இதுவரையில் தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் கருத்தொற்றுமையுடன்கூடிய உடன்பாட்டுக்கு வரவில்லை. அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணையாது விட்டால் வெறுமனே சிவில் சமூக அமைப்புகளால் அவ்வாறானதொரு பொது வேட்பாளரை நிறுத்தி எதிர்பார்த்த வெற்றியை பெற முடியுமா என்பதுதான் கேள்வி.

கடந்த 15 வருடங்களில் தமிழ் தேசியவாத தரப்புகள் என்பேரால் ஒன்றுபட்டு ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க முடியவில்லை. குறிப்பாக கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட எந்தவோர் இணக்கப்பாட்டு முயற்சியின்போதும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஒத்துவரவில்லை. இதேபோன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உடன்படக்கூடிய ஏனைய தரப்புகள் அனைவரையும் இணைக்கும் முயற்சிக்கு தமிழ் அரசு கட்சி உடன்படவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் அனைத்து ஒன்றுமை முயற்சிகளும் தோல்வியடைந்தன. இந்த அனுபவத்தின் வழியாக நோக்கினால், தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு வருவதற்கான சாத்தியங்கள் மிகவும் பலவீனமாகவே இருக்கின்றன. ஆனால், இந்த மும்முனை போட்டிக்கான தேர்தல் களத்தில் தமிழ் வாக்குகள் பிரதான இடத்தை பெறப் போகின்றன. இதனை கையாள்வதில்தான் தமிழருக்கான அடுத்த கட்ட அரசியல் இருக்கின்றது.

# ஜூன் 3, 4இல் அபூர்வ நிகழ்வு; 6 கோள்கள் ஒரே வரிசையில்

## வெற்றுக்கண்ணால் பார்ப்பதே சிறந்தது



ஒரு கோளுக்கு அடுத்து இன்னொரு கோள் என்று அடுக்கி வைக்கப்பட்டது போல நம் கண்களுக்கு தெரியும் நிகழ்வு கோள்களின் தொடர்வரிசை நிகழ்வு என்று அழைக்கப்படுகிறது.

இந்த நிகழ்வை வரும் ஜூன் 3, 4ஆம் திகதிகளில் கிழக்கு திசையில் சூரியன் உதிப்பதற்கு முன்னர் அதிகாலையில் அடிவானில் சூரியனுக்கு மேல் பக்கத்தில் காணலாம். வியாழன் (**Jupiter**), புதன் (**Mercury**), செவ்வாய் (**Mars**), யுரேனஸ் (வருணன் - **Uranus**), சனி (**Saturn**), நெப்ரியூன் ஆகிய 6 கோள்களையும் ஒரே வரிசையில் பார்க்க முடியும்.

இதேநேரம், கோள்கள் ஒரே நேர்கோட்டில் காணப்படவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பூமியில் இருந்து பார்க்கும்போது இந்த கோள்கள் ஒரே நேர்கோட்டில் இருப்பதுபோல ஒரு மாயத் தோற்றத்தை நமக்கு தருகிறது.

நமது சூரிய பாதையில் ஒவ்வொரு கோளும் வெவ்வேறு (பல நூறு கோடி கி.மீ.) தூரத்திலும், வெவ்வேறு சாய்வு கோணத்திலும் சுற்றி வருவதால் அவை எப்போதும் ஒரே நேர்கோட்டில் அணிவகுப்பதற்கு வாய்ப்பில்லை. அவ்வாறு ஒரே வரிசையிலும் ஒரே நேர் கோட்டிலும் அணிவகுத்து காணக்கூடிய மிக அரிய நிகழ்வு **SYZYGY** என்று அழைக்கப்படுகிறது.

சூரியக் குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு கோள்களும் சூரியனை சுற்றி வருகின்றன. இதில் பூமி ஒருமுறை சூரியனை சுற்றிவர 365 நாட்கள் ஆகின்றன. இதேபோல, ஒவ்வொரு கோள்களுக்கும் குறிப்பிட்ட நாட்கள் ஆகின்றன. கோள்களின் சுற்றுவட்டப் பாதையில் ஒன்றை ஒன்று சந்திக்கும் அபூர்வ நிகழ்வுகள் அவ்வப்போது ஏற்படுவது உண்டு.

வரும் ஜூன் 3ஆம் திகதி அதிகாலையில் சூரிய உதயத்துக்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பு இந்த 6 கோள்களையும் ஒரே நேரத்தில் பார்க்கலாம். காற்று மற்றும் ஒளி மாசுபாடு இல்லாத, அடிவானம் மறைக்காத சற்று உயரமான இடத்தில் அமர்ந்துகொண்டு பார்ப்பது மிகவும் சிறந்தது.

வியாழன், புதன் மற்றும் யுரேனஸ் ஆகிய 3 கோள்களும் தொடுவானத்தை ஒட்டி சூரியனுக்கு மிக அருகில் இருப்பதால் இவற்றை பார்க்க பைனகுலர் (**Binocular**) அல்லது தொலைநோக்கியை (**Telescope**) உபயோகப்படுத்தக்கூடாது. இந்தக் கோள்களை மெய்மறந்து பார்த்துக் கொண்டிருக்கும் போதே சூரியன் உதித்து விடுவதால், அதில் இருந்து புறப்படுகிற ஒளி பைனகுலர் அல்லது தொலைநோக்கியால் குவிக்கப்பட்டு, நமது விழித்திரையை உடனடியாக பாதித்தோ அல்லது எரித்தோ விடக்கூடிய அபாயம் உள்ளது.

பின்னிரவு நேரத்தில் சனிக்கோள் கும்பம் (**Aquarius**) விண்மீன்மண்டலத்திலும், யுரேனஸ் மீனம் (**Pisces**) விண்மீன் மண்டலத்திலும், சிறிது நேரத்தில் செவ்வாய் மீனம் (**Pisces**) விண்மீன் மண்டலத்திலும் காணலாம். இந்த மூன்றையும் நேரடியாகவோ, பைனகுலர் அல்லது தொலைநோக்கி மூலமாகவோ இரவில் பார்க்கலாம்.

சூரியனுக்கு மிக அருகில், ரிஷப ராசி மண்டலத்தில் (**Taurus**) காணப்படும் யுரேனஸ், வியாழன், புதன் கோள்களை பைனாகுலர் மற்றும் தொலைநோக்கி மூலம் பார்ப்பதை தவிர்த்துவிட்டு வெறும் கண்களால் பார்ப்பது ஆபத்தில் இருந்து நம்மை தற்காத்துக் கொள்வதாகும்.

புதன், வியாழன் கோள்கள் சூரியனுக்கு மிக அருகில் இருப்பதால் வெறும் கண்ணால் பார்ப்பது கடினம். யுரேனஸ், நெப்ரியூன் கோள்களை பார்ப்பதற்கு அதிக பொறுமையும், திறன்மிக்க ஒரு பெரியதொலைநோக்கியும் தேவை. சூரியன் உதிப்பதற்கு சற்று முன்னால் இந்த நிகழ்வு நடைபெறும் என்பதால் அதிக கவனம் தேவை.

செவ்வாய், சனி வெறும் கண்ணுக்கு மங்கலாக தெரியும். ஜூன் 3ஆம் திகதி சனிக்கோளுக்கு கீழேயும், 4ஆம் திகதி செவ்வாய் கோளுக்கு கீழேயும் பிறைச் சந்திரனையும் காணலாம். இது கண்ணுக்கு விருந்தாக அமையும்.

இதுபோன்ற 5 அல்லது 6 கோள்களின் அணிவகுப்பு மீண்டும் வரும் ஒகஸ்ட் 28ஆம் திகதி, 2025 ஜனவரி 18, பெப்ரவரி 28, ஒகஸ்ட் 29 ஆகிய நாட்களிலும் நிகழும்.

(நன்றி - தி இந்து)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். விஜபிகள் ஆதாயமடைவார்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். மரியாதை கூடும். புதிய பாதை தெரியும்.

**இடபம்**
குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகி மகிழ்ச்சியான சூழல் உருவாகும். எதிர் பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். வெளி யூரிலிருந்து நல்ல செய்தி வரும்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மன உளைச்சல் ஏற்படும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண் ணிக்கை குறையும். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பொறுமைத் தேவைப்படும் நாள்.

**கடகம்**
உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் சில சூட்சுமங்க ளைப் புரிந்துக் கொள்வீர்கள். புது சலுகைகள் கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**சிம்மம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தொட்டது துலங்கும் நாள்.

**கன்னி**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். உறவி னர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர் கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறி முகமாவார்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**துலாம்**
எதிர்பார்த்த சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்து ழைப்பார்கள். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**விருச்சிகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள் வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள். துணிச் சலாக செயல்பட வேண்டிய நாள்.

**தனுசு**
கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். கைமாற்றாக வாங் கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். தள் ளிப் போன விஷயங்கள் உடனே முடியும்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். வியாபாரத் தில் வாடிக்கையாளர்களை பகைத்து கொள்ளாதீர் கள். மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.

**கும்பம்**
பழைய கசப்பான சம்பவங்கள் பேசிக் கொண்டி ருக்க வேண்டாம். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். பணிகளை போராடி முடிப்பீர்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**மீனம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வு டன் செயல்படுவார்கள். உத்தியோகத்தில் முக்கிய பொறுப்புகளை ஏற்பீர்கள். இனிமையான நாள்.

# இன்று வருகிறார் பிரதமர் 4,000 பொலிஸார் பாதுகாப்பு

கன்னியாகுமரி, மே 30

பிரதமர் மோடி இன்று முதல் கன்னியாகுமரி விவேகானந்தர் பாறையில் தொடர்ந்து 45 மணிநேரம் தியானம் இருக்கவுள்ளார். இதையடுத்து கன்னியாகுமரியில் நேற்று முதலே 4 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடலிலும் கண்காணிப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப் பட்டுள்ளன.

இதனிடையே, மக்களவை தேர்தல் முடிவுகள் எதிர்வரும் 4ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நடத்தப்பட்டு முடிவு அறிவிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில், தமிழ்நாட்டுக்கு திடீர் பயணமாக வரும் பிரதமர் மோடி தொடர்ந்து 3 நாட்கள் தியானம் செய்யவுள்ளார்.

2019ஆம் ஆண்டு மக்களவை தேர்தல் முடிவுகள் வெளியானபோது உத்தராகாண்ட் மாநிலம் கேதார்நாத் புனிதத் தலம் சென்று தவமிருந்தார் மோடி.



மோடி தியானம் செய்யவுள்ள பாறையில் 1882இல் சுவாமி விவேகானந்தர் தொடர்ந்து மூன்று தினங்கள் தவமிருந்தார். இதனால், சிறபாத என்று அழைக்கப்பட்ட பாறை பின்னாளில் விவேகானந்தர் பாறை என்று அழைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, மோடியின் இந்தப் பயணத்துக்கு தடை விதிக்க வேண்டும் என்று தமிழக காங்கிரஸ் கட்சி தேர்தல் ஆணையகத்தை கேட்டுள்ளது. நடக்காத பட்சத்தில் கறுப்பு கொடி காட்டும் போராட்டத்தை மேற்கொள்வோம் என்றும் அறிவித்துள்ளது. (ஐ)

# ஸ்டாலின், அண்ணாமலை இணைந்து கூட்டுச்சதி!

## அ. தி. மு. க. கட்சி சாடல்

சென்னை, மே 30

ஜெயலலிதா தெய்வபக்தி கொண்டவர்தான். ஆனால், மதவெறி பிடித்தவர் அல்ல. ஸ்டாலினும் அண்ணாமலையும் சேர்ந்து செய்கின்ற கூட்டுச்சதி இது என்று அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் சாடியுள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த அவர், ஜெயலலிதா ஓர் இந்துத்துவ தலைவர் என்று அண்ணாமலை கூறியுள்ளார். இதை தமிழ்நாடு மட்டுமின்றி உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

அண்ணாமலையின் கட்சியில் தலைவர்களே இல்லையா? அத்வானி குறித்தும், வாஜ்பாய் குறித்தும் ஏன் அவர் பேசுவதில்லை?

ஆனால் அவருடைய ஒரே நோக்கம் ஜெயலலிதா குறித்து பேசுவதுதான். ஜெயலலிதா தெய்வபக்தி கொண்டவர்தான். ஆனால், மதவெறி பிடித்தவர் அல்ல. ஸ்டாலினும் அண்ணாமலையும் சேர்ந்து செய்கின்ற கூட்டுச்சதி இது - என்றும் கூறினார். (ஐ)



# நயினார் நாகேந்திரனுக்கு சி. பி. சி. ஐ. டி. அழைப்பாணை

சென்னை, மே 30

மக்களவை தேர்தலின்போது பா. ஜ. கவின் வேட்பாளர் நயினார் நாகேந்திரனுக்கு சொந்தமான ஹோட்டலில் இருந்து 4 கோடி (இந்திய) ரூபாயை பொலிஸார் கைப்பற்றினர்.

இது வாக்காளர்களுக்கு வழங்குவதற்காக கொண்டு செல்லப்படுகின்றது என்று ஹோட்டல் ஊழியர்கள் வாக்குமூலம் அளித்திருந்தனர்.

இந்த நிலையில், இது தொடர்பில் சட்டமன்ற உறுப்பினராகவும் உள்ள நயினார் நாகேந்திரனை நேரில் முன்னிலையாகி வாக்குமூலம் அளிக்குமாறு சி. பி. சி. ஐ. டி. அழைப்பாணை விடுத்துள்ளது.

இதன்படி நாளை வெள்ளிக்கிழமை அவர் சி. பி. சி. ஐ. டி. பொலிஸில் முன்னிலையாக வேண்டும். (ஐ)

# மோடியின் ஆட்சி தூக்கி எறியப்படும்

## காங்கிரஸ் கட்சி

சென்னை, மே 30

மக்களிடையே பா. ஜ. க. ஆட்சிக்கு எதிராக அலை வீசிக் கொண்டிருக்கிறது. இந்த அலையால் மோடி ஆட்சி வருகிற தேர்தலில் தூக்கி எறியப்படுவது உறுதி -என்று காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைவர் தெரிவித்துள்ளார்.

தமிழக காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

முதல்கட்ட தேர்தலில் தமிழகத்தில் தொடங்கிய மோடி எதிர்ப்பு அலை 6 கட்டங்களாக இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் எதிரொலிக்க தொடங்கியதால் தேர்தல் கள நிலவரத்தை உளவுத்துறை மூலம் அறிந்த பிரதமர் மோடியின் பேச்சில் பதற்றமும், அச்சமும் தொடர்ந்து வெளிப்பட ஆரம்பித்தன.

ஆனால், 10 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. மக்கள் விரோத ஆட்சி நடத்தியதால் மக்களிடையே பா. ஜ. க. ஆட்சிக்கு எதிராக அலை வீசிக் கொண்டிருக்கிறது. இந்த அலையால் மோடி ஆட்சி வருகிற தேர்தலில் தூக்கி எறியப்படுவது உறுதியாகி இருக்கிறது - என்றுள்ளது. (ஐ)

# கலைஞரின் கனவு இல்லம் திட்டம் 3,100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு!

சென்னை, மே 30

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தை முன்னெடுப்பதற்கு 3100 கோடி (இந்திய) ரூபாயை தமிழ்நாடு அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

குடிசைகளில் வசிப்போருக்கு சிமெந்து வீடு அமைத்து வழங்கும் கலைஞரின் கனவு இல்லம் திட்டம் குறித்து கடந்த பெப்ரவரி மாதம் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்தார்.

இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்படி, தமிழ்நாட்டில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், இந்த 2024-25ஆம் நிதியாண்டில் ஒரு வீட்டுக்கு ரூ. 3.10 இலட்சம் என்ற அளவில், ஒரு லட்சம் வீடுகளை கட்டுவதற்கு ரூ. 3100 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது!

**ஜி. எல். பீரிஸ் சுட்டிக்காட்டு**



கொழும்பு, மே. 30

**ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பிலோ அல்லது தற்போதைய ஜனாதிபதிக்கு அப்பதவியில் மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீடிப்பதற்கு அனுமதி வழங் ககோரி சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கோ அரசமைப் பில் இடமில்லை - என்று சட்டத்துறை பேராசியரான பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

தேர்தல் நடத்தப்படும் காலப் பகுதி தொடர்பில் அரசமைப் பில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. அந்த திகதி விவரத் தின் அடிப்படையில் கட்டா யம் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும். அந்தவகையில் எதிர் வரும் செப்ரெம்பர் 17 மற்றும் ஒக்ரோபர் 17 இற்கு இடைப் பட்ட நாளில் ஜனாதிபதித் தேர் தல் நடத்தப்பட்டாக வேண் டும். இதில் துளியளவும் சந்தே கம் இல்லை.

நிலைமை இவ்வாறு இருக்கை யில் சர்வஜன வாக்கெடுப் பொன்றை நடத்தி, தற்போதைய ஜனாதிபதியின் பதவி காலத்தை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீடிக்க வேண்டும் என்ற கதை அடிபடுகின்றது. அவ்வாறு செய்வதற்கு எமது சட்ட கட்ட மைப்பில் இடமில்லை.

தற்போதைய ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை இல்லை. கோட் டாபய ராஜபக்சவின் எஞ்சிய பதவி காலத்துக்காகவே பாரா ளுமன்றம் ஊடாக அவர் தெரி வுசெய்யப்பட்டுள்ளார்.

ஜேஆர் ஜயவர்தன பாராளு மன்றத்தின் ஆயட்காலத்தை நீடித்துக்கொள்வது சம்பந்தமா கவே சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி இருந்தார். மாறாக ஜனா திபதி தேர்தலை பிற்போடுவ தற்கு அல்ல. எனவே, இவை இரண்டையும் குழப்பிக் கொள் ளக்கூடாது-என்றார். (அ)

# மைத்திரிபால சிறிசேனவுக்கு விதிக்கப்பட்ட தடை நீடிப்பு!

கொழும்பு, மே. 30

சுதந்திரக் கட்சியின் தலைவ ராக முன்னாள் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன செயற்படுவ தற்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்வரும் 12ஆம் திகதி வரை நீடிக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்தி ரிக்கா பண்டாரநாயக்க குமார துங்கவினால் தாக்கல் செய்யப் பட்ட முறைப்பாடு கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான முன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்ட நிலையில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் அரசிய லமைப்பின் பிரகாரம், கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கு சட்டபூர்வ உரிமை கிடையாது என முன் னாள் ஜனாதிபதி சந்திரிகா பண் டாரநாயக்க குமாரதுங்க தனது முறைப்பாட்டில் தெரிவித்துள் ளார். (அ)

# அனைத்து பாடசாலைகளும் வழமைபோன்று இயங்கும்

கொழும்பு, மே. 30

நாடு முழுவதும் உள்ள அனைத்து பாடசாலைகளும் இன்றும் நாளையும் வழமை போன்று இயங்கும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசிரியர் சங்கங்கள் ஆரம் பிக்கவுள்ள பணிப் பகிஷ்கரிப் புக்கு மத்தியில் பாடசாலைகள் இயங்காது எனக் கூறப்படுகின்ற பின்னணியிலேயே, கல்வி அமைச்சு இதனை தெரிவித்துள் ளது

இதேவேளை, பல கோரிக் கைகளை முன்வைத்து பல ஆசி ரியர் சங்கங்கள் அறிவித்துள்ள சுகயீன விடுப்பு இன்றும் நாளை யும் மேற்கொள்ளும் தொழிற் சங்க நடவடிக்கையில் பிரதான ஆசிரியர் சங்கங்கள் இணையாது என சங்கங்களின் நிர்வாகிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ)

# மூன்று நாள் இசைத்தமிழ் விழா நாளை கொழும்பில் ஆரம்பம்!

கொழும்பு, மே. 30

உலகின் முதல் தமிழ் பேரா சிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துற வற நூற்றாண்டு விழாவை யொட்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் மூன்று நாள் இசைத் தமிழ் விழா நாளை வெள்ளிக் கிழமை கொழும்பு தமிழ்ச் சங் கத்தில் ஆரம்பமாகின்றது.

துறவற நூற்றாண்டை யொட்டி கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் சுவாமிகளின் திருவு ருவச் சிலை நிறுவப்படவுள்ளது.

இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்களப் பணிப் பாளர் யூ.அனிருத்தனின் ஏற் பாட்டில் கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப் பிள்ளை மண்ட பத்தில் நாளை வெள்ளிக்கி ழமை முதல் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

நாளை பிற்பகல் சுவாமி விபுலானந்தரின் திருவருவச்சி லையுடன் சைவ மங்கையர் வித் தியாலயத்திலிருந்து கொழும்பு தமிழ்ச் சங்கம் வரை ஊர்வலம் இடம்பெறும்.

பின்பு 4 மணியளவில் அங்கு சுவாமி விபுலானந்தரின் சிலை ஆறுமுகநாவலரின் சிலைக்கு இடப் புறமாக திறந்து வைக்கப்பட இருக்கிறது.

கொழும்பு தமிழ்ச்சங்க வர லாற்றில் முதல் தடவையாக நிறுவப்படும் இத் திருவுருவச் சிலையை, தற்போதைய தலை வர் தென்கிழக்கு பல்கலைக்க ழக மொழித்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி க.இர குபரன் தலைமையில் கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் திறந்து வைப்பார்.

இச் சிலையை சாஹித்திய ரத்னா தி. ஞானசேகரன் திருமதி ஞானலக்ஷ்மி ஞானசேகரன் அன்பளிப்பு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாளை பிற்பகல் தொடக்கம் தொடர்ச்சியாக மூன்று நாட்க ளுக்கு அங்கு சிறப்பு நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடு செய்யப் பட்டிருக்கின்றது. (அ)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்று பதிப்புத்துறையை ஊக்குவிக்கும் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், மே. 30

கோப்பாய் ஆசிரியர் கலா சாலையில் ஆசிர்களின் பதிப்பு துறைசார் ஆர்வத்தை அதிகரிக் கும் நோக்குடனான ஒன்றுகூ டல் நேற்று காலை ஆரம்பக் கல்வி நெறி ஆசிரிய மாணவி திருமதி கோகுலக்கண்ணன் மைதிலி தலைமையில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் ஆசிரிய மாணவர் உரையை விசேட கல்வி நெறி ஆசிரிய மாணவி திருமதி அஸ்மிதா பேகம் ஆற்றி னார்.

ஆசிரியர்கள் வெற்றிகரமாக புத்தக வெளியீடு செய்து சந் தைப்படுத்துவதற்கான உத்தி கள் என்ற தொனிப்பொருளில் ஓய்வு நிலை சமூக சேவை உத்தி யோகத்தரும் புத்தக வெளியீட் டாளருமாகிய வேதநாயகம் தபேந்திரன் சிறப்புரை ஆற்றி னார்.



இவருக்கான அறிமுக உரையை கலாசாலை விரிவுரை யாளர் த. தவசேகர் ஆற்றினார். கலாசாலை அதிபர் ச. லலீசன் நிறைவுரை ஆற்றினார்.

இலங்கையில் வெளிவந்த புத்தகங்களில் 75 வீத புத்தகங் கள் ஆசிரியர்களாலேயே வெளி யிடப்பட்டுள்ளன எனக் குறிப் பிட்ட கலாசாலை அதிபர் குறைந்த பட்சம் மின்நூல் வெளி யிடும் பழக்கத்தையாவது பயிற் சிக்காலத்தில் ஆசிரிய மாணவர் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை புகையிலை ஒழிப்பு தொடர்பான காணொளி ஆசிரிய மாணவர்களால் தயா ரித்து காட்சிப்படுத்தப்பட்டது. (அ)

# முல்லைத்தீவு மீனவர் முன்னெடுத்த போராட்டம் தற்காலிகமாக நிறுத்தம்!

முல்லைத்தீவு, மே. 30

முல்லைத்தீவு தியோநகர் பகுதியில் சுதந்திரமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அனுமதிக்குமாறு கோரி பாதிக் கப்பட்ட மீனவர்கள் முன்னெ டுத்திருந்த போராட்டம் தற்கா லிகமாக கைவிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத் தில் கரையோரக் கிராமங்களில் ஒன்றான தியோநகர் பகுதியில் பிராதான வீதியினையும் கடற் கரையினையும், இணைக்கும் இணைப்பு வீதியானது சில தரப் பினரால் வேலியிட்டு அடைக் கப்பட்டுள்ளதாக மீனவர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இதனை தொடர்ந்து குறித்த பகுதி மக்களினால் வேலித் தடைகளை அகற்றப்பட்டன. குறித்த பகுதியில் சுற்றுலாத்த ளம் ஒன்றினை அமைத்துள்ள தனியார் நிறுவனம் ஒன்று மீன வர்களுக்கு தொடர்ச்சியாக இடையூறுகளை விளைத்து வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனவே இதற்கு உரிய தீர்வு கிடைக்கப்பெறும் வரையில் தொடர் போராட்டத்தில் ஈடு படப்போவதாக மக்கள் தெரி வித்து போராட்டத்தை முன்னெ டுத்திருந்தனர்.

இதனையடுத்து பிரதேச செயலக அதிகாரிகள் போராட் டத்தில் ஈடுபட்ட மக்களைச் சந் தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போது குறித்த பிரச் னைக்கு விரைவாக தீர்வு பெற்றுத் தரப்படும் என வாக்குறுதி அளக் கப்பட்ட நிலையில் போராட் டம் தற்காலிகமாக கைவிடப் பட்டுள்ளது.

தீர்வு கிடைக்காவிட்டால் இரண்டு வாரங்களின் பின்னர் மீண்டும் போராட்டம் முன் [illegible] தெரிவித்துள்ளனர். (அ)

# கட்டுநாயக்க விமான நிலையம் செல்லும் வாகனங்களுக்குப் புதிய கட்டுப்பாடுகள்!

கொழும்பு, மே. 30

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையத்திற்கு வெளியே வாக னங்களை நிறுத்துதல் மற்றும் கையாளுதல் தொடர்பான புதிய அறிவிப்பு வெளியிடப் பட்டுள்ளது.

இதன்படி, வருகை முனை யத்திற்கு வெளியே உள்ள பகுதி யில் சாரதிகள் இல்லாமல் வாக னங்களை நிறுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக விமான நிலையம் மற்றும் விமானச் சேவைகள் நிறுவனத்தின் தலை வர் அத்துல கல்கட்டிய தெரி வித்துள்ளார்.

குறித்த வளாகத்தில் வாக னங்களை நிறுத்தும் போது போக்குவரத்து நெரிசல் ஏற்படு வதைத் தவிர்க்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், விமானப் பயணி களை ஏற்றிச் செல்ல வரும் அனைத்து வாகனங்களும் உரிய வாகன தரிப்பிடங்களில் இருந்து குறிப்பிட்ட நேரத்திற்கு மாத்தி ரமே விமான நிலையத்தின் வருகை முனையத்திற்கு பிரவே சிக்க வேண்டும் எனவும் விமான நிலையம் மற்றும் விமானச் சேவைகள் நிறுவனத்தின் தலை வர் அத்துல கல்கட்டிய அறி வித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் நடத்துவதில் ஜனாதிபதி உறுதி!

## சொல்கிறார் அமைச்சர் ஹரீன்

கொழும்பு, மே. 30

**மக்கள் ஆணையுடனேயே ஆட்சிக்கு வரவேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதியாக இருக்கின்றார். எனவே, தேர்தல் நிச்சயம் நடைபெறும் - என்று அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

“தேர்தலொன்று அவசியமில்லை, தற்போதைய ஜனாதிபதியே பதவியில் தொடர வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் பாலித ரங்கே பண்டார கூறியுள்ளாரே” என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

அவ்வாறு இல்லை, தேர்தல் நடத்தப்பட்டு மக்கள் ஆசியுடன் வெற்றிபெறுவதையே ஜனாதிபதி விரும்புகின்றார். தேர்தலில் போட்டியிடவுள்ளதை அடுத்த வாரமளவில் அவரே அறிவிப்பார். ஜனாதிபதித் தேர்தலில் அவர் களமிறங்குவதும், வெற்றி பெறுவதும் உறுதி.



ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் வருவார்கள். அதற்கான நேரம் வரும். அதுவரை காத்திருப்போம்-என்றார். (அ)

# பிரதமராக ஆசைப்படும் சிலரே புறமுதுகில் குத்த பார்க்கின்றனர்

## சரத் பொன்சேகா கவலை



கொழும்பு, மே. 30

பிரதமர் பதவிக்கு ஆசைப்படும் சிலரே கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி புறமுதுகில் குத்த பார்க்கின்றனர் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

கட்சிக்குள் உள்ள சிலர் பிரதமர் பதவி குறித்து கனவு காண்கின்றனர். மேலும் சிலர் தேசியப் பட்டியலுக்காக போராடுகின்றனர், அமைச்சுப் பதவிகளை எதிர்பார்த்துள்ள சிலரும் இருக்கின்றனர். இவ்வாறு கனவு காண்பவர்கள்தான் கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்துகின்றனர்.

இதனை சீர்செய்யாவிட்டால் கட்சியாக முன்னோக்கிப் பயணிக்க முடியாது. அது கட்சிக்கே பெரும் பின்னடைவாக அமையும். மக்களுக்கு பரிசு பொருட்களை வழங்கி நாட்டை மீட்க முடியாது. முதுகெலும்புள்ள தலைமைத்துவம் அவசியம். விவாதித்துக் கொண்டு இருப்பதில் பயன் இல்லை. செயலில் தான் காட்ட வேண்டும்-என்றார். (அ)

# யாழ். போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்தவர் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம், மே. 30

யாழ். போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்து, ஊழியர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைதான வரை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த நபர் கடந்த திங்கட்கிழமை இரவு 10 மணியளவில் காயமடைந்த நபர் ஒருவரை தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு வைத்தியசாலை கட்டடத்துக்குள் அத்துமீறி நுழைந்து, அவசர சிகிச்சை பிரிவின் அருகே காயமடைந்த நபரை இறக்கி விட்டுள்ளார்.

அதன்போது அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த வைத்தியசாலை ஊழியருடன் மோட்டார் சைக்கிள் ஓட்டி முரண்பட்டு தாக்குதலையும் மேற்கொண்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் குறித்த நபரை மடக்கிப் பிடித்து, யாழ்ப்பாண பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்நிலையில் குறித்த நபரை யாழ். நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது, சந்தேகநபரை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு நீதி மன்று உத்தரவிட்டது. (அ)

# 23 கோடி ரூபாய் பெறுமதிமிக்க அம்பர்கிறீஸ்டன் இருவர் கைது!

சிலாபம், மே 30

திமிங்கல வாந்தி எனப்படும் அம்பர்கிறிஸுடன் மீனவர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 23 கோடி ரூபாய் பெறுமதியான அம்பர்கிறீஸ் கைப்பற்றப்பட்டுள்ளது.

புத்தளம் - கற்பிட்டி - கந்தகுளிய பிரதேசத்தில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். கடற்படை புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று புதன்கிழமை அதிகாலை இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைதான மீனவர்கள் கந்தகுளி பிரதேசத்தை சேர்ந்த 40 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடலில் மிதந்த திமிங்கல வாந்தியை இரகசியமாக எடுத்து வந்த நிலையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். (ஐ)

# ஆயிரத்து 700 ரூபாய் சம்பள விடயத்தில் விட்டுக்கொடுப்புக்கு இடமேயில்லை!

## மருதபாண்டி ராமேஷ்வரன் திட்டவட்டம்

கொழும்பு, மே. 30

“அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும். உரிய வகையில் அத்தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கின்றோம்.” - என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவ ரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

அத்துடன், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரத்து 700 ரூபா சம்பள விடயத்தில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை எனவும் அவர் கூறினார்.

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் ஜனன தினத்தை முன்னிட்டு, இ.தொ.காவின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைய எம்.பி ராமேஷ்வரனின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் கொத்மலை கல்வி வலயத்துக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் இசைக்கருவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று பூண்டுலோயா தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

கடந்த முறை சம்பள நிர்ணயசபை ஊடாக ஆயிரம் ரூபா சம்பளம் நிர்ணயிக்கப்பட்ட போதும் அதனை வழங்க முடியாது எனக்கூறி தோட்ட நிர்வாகம் நீதிமன்றத்தை நாடியது. எனினும், இறுதியில் நாம் வெற்றிபெற்றோம்.

இந்நிலையில் பல சுற்று பேச்சுகளின் பின்னரே இம்முறை ஆயிரத்து 700 ரூபா நிர்ணயிக்கப்பட்டு, அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் கலந்துரையாடல்களில் கம்பனிகள் பங்கேற்கவில்லை. அது அவர்களின் தவறு.

எனவே, வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள தொகையை வழங்க முடியாவிட்டால் தோட்டங்களை அரசாங்கத்திடம் ஒப்படைத்துவிட்டு, கம்பனிகள் வெளியேறலாம். இது பற்றி அரசாங்கமும் அறிவித்துவிட்டது.

ஆயிரத்து 700 என்பது தேர்தல் வாக்குறுதி அல்ல, எதிரணியில் உள்ள சிலர்தான் சம்பள விவகாரத்தை வைத்து அரசியல் நடத்துகின்றனர். கம்பனிகளை நீதிமன்றம் செல்வதற்கு தூண்டியதுகூட இந்த எதிரணி தரப்புதான்.

நாட்டில் உள்ள சட்டத்தின் பிரகாரம் முதலில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும். தேர்தல் தொடர்பில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்தில் கருத்துகளை வெளியிடலாம். ஆனால் அரசமைப்பின் பிரகாரமே செயற்பாடுகள் இடம்பெறும். அந்த வகையில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்க்கின்றோம்-என்றார். (அ)

# 10 முதல் 20 வீதம் வரை மின் கட்டணம் குறையும்!

கொழும்பு, மே. 30

மின்சாரக் கட்டணத்தை 10 முதல் 20 வீதம் வரை குறைப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும், மின்சார சபையை மறுசீரமைத்தால் மின்சாரம் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் என இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் தனுஷ்க பராக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த விசேட செய்தியாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வருடத்தின் இரண்டாவது மின் கட்டணத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பிரேரணையை ஜூலை முதலாம் திகதி மின்சார சபை மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும், அங்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

மேலும் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ள மின்சார சபை மறுசீரமைப்பு சட்டத்தின் மூலம் மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் இடம்பெற்றதுள்ளதாகவும் வெளிநாட்டு நிறுவனங்களின் தேவைக்கேற்ப மின்சார சபையின் தற்போதைய நிர்வாகம் செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# இலங்கையின் மொத்த கையிருப்பு 5.5 பில்லியன் டொலராக அதிகரிப்பு

கொழும்பு, மே. 30

ஏப்ரல் மாத இறுதிக்குள் இலங்கையின் மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு 5.5 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சுமார் 8 வீதத்தால் வலுவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ரூபாவின் பெறுமதி உயர்வதென்பது பணவீக்கம் மற்றும் ஒட்டுமொத்த வாழ்க்கைச் செலவை குறைக்கவும் வெளிநாட்டு கடனைத் திருப்பிச் செலுத்துவதை எளிதாக்கவும் உதவுமென்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம் உலகளாவிய ரீதியில் இலங்கையின் நிதி வலுமீதான நம்பிக்கை அதிகரிக்கும் என நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டகப்புலம் காணிகளுக்குள் பொதுமக்கள் பிரவேசிக்க தடை!

## கண்ணிவெடி அபாயம் காரணமாக

யாழ்ப்பாணம், மே. 30

**தெல்லிப்பழை ஒட்டகப்புலத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட 234.83 ஏக்கர் காணிக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்கு தற்காலிக தடை அறிவிக்கப்பட்டுள்ளது.**

விடுவிக்கப்பட்டுள்ள பகுதியில் சுமார் 55 ஆயிரம் சதுர அடி காணியில் கண்ணிவெடிகள் காணப்படக்கூடும் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ள நிலையில், யாழ். மாவட்ட செயலகத்தால் உரிய தீர்வு காண்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதி வரை விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் செல்லவேண்டாம் என காணி உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, விடுவிக்கப்பட்டுள்ள காணிகளில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் தொழில்நுட்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன்போது கண்ணிவெடிகள் காணப்படும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டால் அந்த பகுதிகளை தவிர்த்து ஏனைய காணிகளுக்குள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு பின்னர் பொதுமக்கள் தங்களின் மீள்குடியேற்ற செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# ஜூன் 6 ஆம் திகதிக்குப் பின்னர் விவாதம் நடக்க வாய்ப்பில்லை!



கொழும்பு, மே. 30

"பொருளாதார கொள்கைத் திட்டம் தொடர்பாக ஜூன் மாதம் 6 ஆம் திகதி விவாதம் இடம்பெறவில்லையாயின் அதன்பின்னர் விவாதம் இடம்பெறுவதற்கான சாத்தியம் இல்லை" என தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இரண்டு கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலேயே விவாதம் பெரும்பாலும் ஜூன் 6 ஆம் திகதி இடம்பெறும். நாம் பல திகதிகளை அறிவித்திருந்த போதிலும் சஜித் பிரேமதாசவுக்கு நாம் வழங்கிய திகதிகளில் விவாதத்தில் பங்கேற்கமுடியாது என தெரிவித்தனர்.

ஜூன் 6 ஆம் திகதி விவாதம் இடம்பெறவில்லையாயின் அதன்பின்னர் இருதரப்பினருக்கும் இடையில் விவாதம் நடைபெறுவதற்கான சாத்தியம் இல்லை.

நாட்டில் விரைவில் தேர்தல் இடம்பெறவுள்ளது. பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டே நாம் இந்த விவாதம் இரண்டு கட்சிகளின் தலைவர்களுக்கிடையில் நடைபெற வேண்டும் என கோரிக்கை விடுத்தோம்-என்றார்.

(அ)

# யாழில் மின் கட்டணம் செலுத்தாமல் முகாமை விட்டுச் சென்ற இராணுவம்

யாழ்ப்பாணம், மே. 30

யாழ்ப்பாணத்தில் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மின் கட்டணத்தை செலுத்தாது இராணுவத்தினர் முகாமை விட்டுச் சென்றுள்ளனர் என குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையின் ஒரு பகுதியில் 4 வருட காலமாக இராணுவத்தினர் முகாம் அமைத்து இருந்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த காலப் பகுதிக்கான மின்சாரக் கண்டனத்தை அவர்கள் செலுத்தாமல் இருந்துள்ளனர் எனவும், நிலுவையாக 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் இருந்தவேளை அந்த முகாமை விட்டு இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை தென்னிந்திய திருச்சபையின் ஆளுகைக்கு உட்பட்டது என்பதனால், அது தொடர்பில் தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் பத்மதயாளன் ஆண்டகையைத் கேட்டபோது, குறித்த தொகையை இராணுவமே செலுத்தவேண்டும் அவர் தெரிவித்தார்.

(அ)

# தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த யாழ். மாவட்ட கூட்டுறவு சபை ஆதரவு

யாழ்ப்பாணம், மே 30

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு யாழ். மாவட்ட கூட்டுறவு சபையும் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பிலான சமூக அமைப்புகளுடனான தொடர்ச்சியான சந்திப்பும் கலந்துரையாடலும் வரிசையில் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட கூட்டுறவு சபையினருடன் பொது வேட்பாளர் தொடர்பில் செயல்படும் சிவில் சமூக கூட்டிணைவு செயல்பாட்டாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.



இந்த சந்திப்பில், யாழ். மாவட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கம், சிக்கன கடன் கூட்டுறவு சங்கம், கால்நடை கூட்டுறவு சங்கம், பனை தென்னை வள கூட்டுறவு சங்கம், கிராமிய வங்கி நுகர்ச்சி கூட்டுறவு சங்கம் ஆகிய சங்கங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தனர்.

சிவில் சமூக கூட்டிணைவு செயல்பாட்டாளர்கள் சார்பில், அரசியல் ஆய்வாளர்களான நிலாந்தன், சி. அ. யோதிலிங்கம், சமூக செயல்பாட்டாளர் சி. சுந்தரேஸ்வரன், பண்பாட்டு மலர்ச்சி கூடத்தின் இயக்குனரும் பேராசிரியருமான சிதம்பரநாதன், முன்னாள் மாணவர் ஒன்றிய தலைவரான விஜயகுமார் மற்றும் இந்திரன் ஆகியோரும் பங்கேற்றனர்.

தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதன் அவசியத்தை ஏற்றுக்கொண்ட யாழ் மாவட்ட கூட்டுறவு சபையின் உறுப்பினர்கள் தங்கள் பூரண ஆதரவையும் தெரிவித்தனர். தங்களையும் பொது வேட்பாளர் தொடர்பிலான பொதுக் கட்டமைப்பில் இணைத்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டனர்.

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் வவுனியாவில் சிவில் சமூக பிரதிநிதிகள் கூடிப்பேசியதைத் தொடர்ந்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புகளை சேர்ந்தவர்கள், பொது மக்கள் ஆகியோரை சிவில் சமூக கூட்டிணைவின் செயல்பாட்டாளர்கள் தொடர்ச்சியாக சந்தித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# ஐ.எஸ்.ஐ.எஸ் குறித்து போலி அறிக்கை; கைதான விரிவுரையாளருக்கு பிணை

கொழும்பு, மே. 30

ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் கலாநிதி புன்சர அமரசிங்க கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் கடந்த 20ஆம் திகதி இந்தியாவில் கைதான நான்கு இலங்கையர்களும் புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியவர்களின் பட்டியலில் இருந்தவர்கள் என விரிவுரையாளர் கலாநிதி புன்சர அமரசிங்க தகவல் ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில் இந்தியாவில் கைது செய்யப்பட்ட குறித்த 4 இலங்கையர்கள் தொடர்பில் போலியானத் தகவல்களை வெளியிட்ட குற்றச்சாட்டில் அவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் நேற்று கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கை மானியம் வங்கிக் கணக்குகளுக்கு!

கொழும்பு, மே. 30

விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் பிரகாரம், 2024 ஆம் ஆண்டுக்கான நெற்செய்கைக்காக விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கை மானியமாக 2.5 பில்லியன் ரூபா விவசாயிகளின் கணக்குகளுக்கு செலுத்தப்பட்டுள்ளது என கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 2.5 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை விவசாயிகளின் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதுடன் மானியம் வழங்கப்பட்ட நெல் அளவு 167,362 ஹெக்ரேயர் ஆகும் என்றும் தெரிவித்துள்ளது.

இதேவேளை இவ்வருடம் சுமார் 450,000 ஹெக்ரேயர் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன், பயிரிடப்படும் அனைத்து நெற்பயிர்களுக்கும் சுமார் 7.5 பில்லியன் ரூபா நிதி மானியமாக வழங்கப்படவுள்ளது

மேலும் விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர அவர்கள் 2024 ஆம் ஆண்டு நெற்செய்கை மேற்கொள்ளும் ஒவ்வொரு விவசாயிக்கும் ஹெக்டேயருக்கு 15,000 ரூபா வீதம் வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்ததுடன் அதற்கு அமைச்சர்கள் குழுவின் அனுமதியும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ගොවිජන සංවර්ධන දෙපාර්තමේන්තුව
கமநல அபிவிருத்தித் திணைக்களம்
Department of Agrarian Development

(அ)

# ரெமல் சூறாவளி தாக்கம் இன்று முதல் குறையும்!

கொழும்பு, மே. 30

ரெமல் சூறாவளியின் தாக்கம் இன்று முதல் குறைவடையு மென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

தென்மேற்கு பருவப்பெயர்ச்சியின் காரணமாக, எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று தினங்களில் நாட்டின் தென்மேற்கு பிராந்தியத்தில் மழையுடனான வானிலை நிலவும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, மழையுடனான வானிலை காரணமாக 10,483 குடும்பங்களை சேர்ந்த 39,156 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

DEPARTMENT OF METEOROLOGY

இதேவேளை, 8 மாவட்டங்களின் சில பிரதேச செயலகங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் சில பிரதேச செயலக பிரிவுகளுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்ரப்பை பண்டப்பொருளாக்கும் அரசியலை ஹரீஸ் கைவிடவேண்டும்

## அசாத் சாலி கோரிக்கை

நிந்தவூர், மே. 30

**அரசியல் பிழைப்புக்காக பெருந்தலைவர் அஷ்ரப்பை பண்டப்பொருளாக கூவி விற்கும் அரசியலை உடன் பாரா ளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் கைவிட வேண்டுமென மேல் மாகாண முன்னாள் ஆளுநரும் தேசிய ஐக்கிய முன்னணி யின் தலைவருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.**

கல்முனையில் அஷ்ரப் அருங் காட்சியகம் அமைப்பதற்கு ஹரீஸ் எம்.பி. எடுக்கும் முயற் சிகள் குறித்து அதிருப்தி தெரி வித்தே, அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அந்த அறிக்கையில் அசாத் சாலி மேலும் தெரிவித்துள்ளதா வது: -

முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தா பக தலைவர் அஷ்ரபின் ஆளு மைகள் காலத்தால் அழியா தவை. அவரது சிந்தனைகள் முஸ் லிம் சமூகத்தின் விலைமதிக்க முடியாத சொத்தாக மதிக்கப்ப டுகின்றன. அஷ்ரபின் மறைவுக் குப் பின்னர், அக்கட்சியை பிர திநிதித்துவப்படுத்தும் எம். பி.க்கள் எவரும் அவரது அடி யொட்டி அரசியல் செய்ய வில்லை. இதனால், புதைகுழி யில் மூழ்கும் நிலைக்கு சமூக அரசியல் சென்றுள்ளது. இவ் வாறு இறுதி மூச்சைவிடும் அர சியல்வாதிகளில் ஒருவராகவே ஹரீஸ் உள்ளார்.

இது தேர்தல் காலம் என்ப தால், தலைவர் அஷ்ரபின் பெயரை ஞாபகமூட்டி, இழந்த மவுசை உயர்த்தும் முயற்சியில் ஹரீஸ் இறங்கியுள்ளதாகவே தெரிகிறது. கல்முனையில் அஷ் ரப் அருங்காட்சியகம் அமைப் பதற்கு ஜனாதிபதியிடம் நிதி கோரி உள்ளமை இதனையே புலப்படுத்துகிறது.

ரணிலுக்கு தலையைக் காட்டி, சஜிதுக்கு முதுகைக் காட்டி மற்றும் ஹக்கீமுக்கு ஊரைக் காட்டி அரசியல் செய்யும் இவ ரால் எதைச் சாதிக்க முடிந்தது? தலைமைக்கு விசுவாசம் இல் லாத ஹரீஸ் சமூகத்தை நேசிப் பார் அல்லது சொந்த ஊரை வாழ வைப்பார் என்றெல்லாம் எதிர்பார்க்க முடியாது. இவரது எண்ணமெல்லாம் அஷ்ரபின் பெயரை விற்று எம்.பியாவது மாத்திரமே.

இந்த 24 வருட இடைவெளி யில் முஸ்லிம் காங்கிரஸ், அஷ்ர புக்காக எதைச் செய்தது? அதி காரத்தில் இருந்த காலங்களிலா வது பெருந்தலைவரின் மரணம் குறித்து உறுதியான முடிவைப் பெற முடிந்ததா? ஆகக் குறைந் தது தலைவரதும் அவரதும் மற்றும ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முகத்தோற்றமு மாக உள்ள ஊரான கல்முனைக் காவது இவரால் எதையும் செய்ய இயலவில்லை. ஏனைய முஸ் லிம் அரசியல்வாதிகள் தங்களது ஊர்களையாவது அபிவிருத்தி செய்து உருப்படவைத்துள்ள னர். கல்முனையில் ஒரு சந்தைக் கட்டடம் இல்லை. மாநகர சபைக்கு முறையான அமைவி டம் இல்லை. உடைந்துகிடக் கும் வாசிகசாலையை கட்டவக் கில்லை. சாய்ந்தமருது மக்களை இணைத்துச் செல்லும் திட்டம் துளியளவும் இல்லை. இந்த இய லாமைகளை மறைப்பதற்கே, கல்முனையில் அஷ்ரப் அருங் காட்சியகம் அமைக்க முயல்கி றார்.

தலைவரின் குடும்பத்தினர் கூட இதை விரும்பவில்லை. அமான் அஷ்ரப் அவரது டுவிட் டரில் இதை வன்மையாக எதிர்த் துள்ளார். விவசாய ஆய்வுகூ டம், மீன்களைப் பதனிடும் தொழிற்சாலை அல்லது ஒலு வில் துறைமுகப் பிரச்சினை இதுபோன்று உருப்படியாகச் சிந்திக்காமல், அஷ்ரபின் பெயரை சில்லறை வியாபாரமாக மாற்று வதற்கு ஹரீஸுக்கு எந்த அருக தையும் கிடையாது. முஸ்லிம் சமூக எழுச்சி குறித்து சிந்தித்த தலைவர் அஷ்ரபை, அருங்காட் சியகத்துக்குள் அடைத்துவைக்க முடியாது-என்று குறிப்பிட்டுள் ளார். (அ-06)



# “தென்னம்படல் மறைப்பு” கல்முனையில் வெளியீடு

கல்முனை, மே. 30

கவிஞர், ஜனரஞ்சக எழுத்தா ளர் கல்முனை றிஸ்வியூ முஹம் மத் நபீல் எழுதிய “தென்னம்ப டல் மறைப்பு” அழியாத நினை வின் தடங்களை சாணம் மெழு கிய திண்ணையின் நடுவில மர்ந்து கேட்க வாருங்கள் நூல் வெளியீட்டு விழா கல்முனை ஆஸாத் பிளாசா மண்டபத்தில் நடைபெற்றது.

சிறீ லங்கா முஸ்லிம் காங்கி ரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக் கீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மேற்படி நிகழ்வில் கவிஞர்கள்,எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள்,அரசியல் பிரமுகர்கள்,கல்விமான்கள் மற்றும் வர்த்தக பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (அ)

# வெல்லாவெளி கிணற்றில் சடலம்!

மட்டக்களப்பு, மே. 30

வெல்லாவெளி, மண்டூர் பிரதேசத்தில் வெல்லாவெளி களுபாலமவிற்கு அருகில் உள்ள கிணற்றில் இருந்து சடலமொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

காலை வெல்லாவெளி பொலிஸாருக்கு கிடைத்த தகவ லின் படி, சடலம் மீட்கப்பட் டுள்ளது.

மண்டூர் பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய ஒருவரே இவ் வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 26ஆம் திகதி அயல் வீட்டாருடன் ஏற்பட்ட தகராறு தொடர்பாக சமாதான சபைக்கு அனுப்பப்பட்ட முறைப்பாட் டில் பங்கேற்பதற்காக வீட்டில் இருந்து சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது ஒரு குழுவால் அல்லது தனி நபரால் உயிரிழந்தவரின் தலை யில் அடித்து கிணற்றில் வீசப் பட்டமை விசாரணையில் தெரி யவந்துள்ளது.

இந்த கொலையுடன் தொடர் புடைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (அ)



# சாய்ந்தமருது காரியப்பர் வித்தியாலய மாணவத் தலைவர்களுக்கு சின்னம்

அம்பாறை, மே. 30

சாய்ந்தமருது பொலிவேரி யன் எம்.எஸ்.காரியப்பர் வித்தி யாலய மாணவத் தலைவர்களுக் கான சின்னம் சூட்டும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.எஸ். எம்.ஆரிப் தலைமையில் அண் மையில் இடம்பெற்றது.

பிரதி அதிபர்கள் மற்றும் ஆங்கிலப் பாட ஆசிரியர் முஹம் மட் அஸ்மி ஆகியோரின் ஒழுங் குபடுத்தலில், கணித பாட ஆசி ரியர் அலி ரஜய் நெறிப்படுத்த லில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை வைத்தியர் சனூஸ் காரியப்பர் பிரதம அதிதி யாகவும்,கல்முனை கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்களான ஏ. றாஸிக் மற்றும் எம்.முஹம்மட் சியாம் ஆகியோர் கௌரவ அதி திகளாகவும் கலந்து கொண்ட னர். (அ)

# சாய்ந்தமருது பாடசாலைக்கு பின் புறத்தில் கழிவு நீரால் தொற்றுநோய் பரவும் அபாயம்!

## இரவு வேளைகளில் கடும் துர்நாற்றம்



அம்பாறை, மே. 30

சாய்ந்தமருது பிரதான வீதி யிலுள்ள மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்திற்கு பின் புறமாகவுள்ள வடிகாலில் பல மாதங்களாக கழிவு நீர் தேங்கி யுள்ளதால் தொற்று நோய் மற் றும் டெங்கு காய்ச்சல் பரவக் கூடிய ஆபத்தான நிலைமை தோன்றியுள்ளது.

இந்த வடிகாலுக்கு அருகில் தொழிற்பயிற்சி வள நிலையம், நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையின் காரியால யம், பொது வாசிகசாலை என் பன அமைந்து காணப்படுகின் றன.

அதனால் இவ் வடிகாலோ ரமாக தினசரி பாடசாலை மாண வர்கள், ஆசிரியர்கள், பொதுமக் கள் என பலரும் பயணிக்கின்ற னர்.

புற்கள் மற்றும் செடி கொடி கள் பற்றையாக வளர்ந்து விஷ ஜந்துக்கள் குடியிருக்கும் இட மாக மாறியுள்ள இப் பிரதேசத் தில் தேங்கியுள்ள அசுத்தமான நீரில் டெங்கு நுளம்பு குடம்பி கள் பெருகக்கூடிய பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருட்கள் நிறைந்து காணப்படுவதால் துர் நாற்றமும் வீசுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதி காரிகளும் பாடசாலை சமூக மும் உடனடி நடவடிக்கை எடுக் குமாறு பிரதேசவாசிகள் தெரி விக்கின்றனர். (அ)

# மட்டக்களப்பு பிராந்திய இளைஞர் யுவதிகளுக்கு தகவலறியும் சட்டமூலம் தொடர்பில் செயலமர்வு

மட்டக்களப்பு, மே. 30

தகவலறியும் உரிமைச் சட்ட மூலம் தொடர்பில் இளைஞர் கள் மற்றும் யுவதிகளின் மத்தி யில் விழிப்புணர்வை ஏற்படுத் தும் செயலமர்வு அண்மையில் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் தகவல றியும் உரிமைச் சட்டமூலத்தை வினைத்திறனாக பயன்படுத்து வது, அதற்கான விண்ணப்பங் களை சமர்ப்பிப்பது, அதனுடன் தொடர்பான அதிகாரிகளை தொடர்பு கொள்வது தொடர் பான விளக்கங்களை சிரேஸ்ட ஊடகவியலாளரும், தகவலறி யும் உரிமைச் செயற்பாட்டாள ருமான நிப்தி அலி இதன் போது தெளிவாக வழங்கியிருந்தார்.

மட்டக்களப்பு பிரதேசத் தைச் சேர்ந்த சுமார் 25 இளை ஞர் யுவதிகள் பங்கேற்ற இந்த செயலமர்வில் அவர்கள் வின விய கேள்விகளுக்கு இதன் போது தெளிவான விளக்கங்களைப் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ச்சியாக இந்த செய லமர்வு நாடு தழுவிய ரீதியில் நடாத்தப்படவுள்ளமை குறிப்பி டத்தக்கவிடயமாகும். (அ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காஸாமீது மீண்டும் இஸ்ரேல் தாக்குதல்

## 37 பேர் உயிரிழப்பு, தொடரும் சோகம்

காஸா, மே 30

**ஐ. நா., உலக நாடுகளின் கோரிக்கைகளை உதறித்தள்ளி விட்டு காஸாமீது மீண்டும் இஸ்ரேல் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் 37 பேர் பலியானதாக தகவல் வெளியாகியுள்ளது.**



இஸ்ரேல் - ஹமாஸ் இடையே 7 மாதங்களுக்கும் மேலாக போர் நடந்து வருகிறது. இந்தப் போரில் காஸாவில் மட்டும் 35 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகினர். ஹமாஸ் அமைப்பினரை அழிக்கும் வரை போர் நிறுத்தம் இல்லையென சூளுரைத்து காஸா மீது இஸ்ரேல் கடும் தாக்குதல்களைத் தொடர்ந்து வருகின்றது.

ஐ. நா., சர்வதேச நாடுகளின் கடும் எதிர்ப்பையும் மீறி காஸாவின் ரபா நகர் மீது இஸ்ரேல் தொடர்ச்சியாகத் தாக்குதல்களை நடத்தி வருகிறது. போர் காரணமாக இடம்பெயர்ந்த 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் ரபா நகரில் தஞ்சமடைந்துள்ளதால் அங்கு தாக்குதல்களை நடத்த வேண்டாமென அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும், ஐ.நா.வும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

ஆனால், அதைப் பொருட்படுத்தாமல் இஸ்ரேல் இராணுவம் உள்ளிட்ட படைகள், ரபா நகர் மீதான தாக்குதலை நாளுக்கு நாள் தீவிரப்படுத்தி வருகின்றன. கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ரபா நகரில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் 45 பேர் கொல்லப்பட்டனர். இதற்கு சர்வதேச அளவில் கடும் கண்டனம் எழுந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு மீண்டும் அதே பகுதியில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதில் 16 பேர் பலியாகினர். பலர் படுகாயமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து நேற்றும் காஸாமீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதலில் ஈடுபட்டது. இந்தத் தாக்குதல்களில் இது வரை 37 பேர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. (எ)



# கடும் நிதி நெருக்கடி காரணமாக ஜெட் விமானத்தை விற்ற ட்ரம்ப்

வாஷிங்டன், மே 30

கடும் நிதி நெருக்கடியைச் சமாளிக்க அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும், பெரும் கோடீஸ்வரருமான டொனால்ட் ட்ரம்ப், தனக்கு விருப்பமான ஜெட் விமானத்தை விற்றுவிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

2017 முதல் 2020 வரை அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ட்ரம்ப், 2020 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிட்டார். ஆனால், அவர் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடனிடம் தோல்வியைத் தழுவினார்.

ஜனாதிபதி பதவியை இழந்தது முதல் ட்ரம்ப் மீது ஏராளமான வழக்குகள் தொடரப்பட்டன. இதில் ஒரு சில வழக்குகளில் ட்ரம்ப் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். இதுதவிர அடுத்தடுத்து தொடரப்படும் வழக்குகளால் ட்ரம்பின் பல தொழில்கள் பாதிக்கப்பட்டு வருவாய் இழப்பும் ஏற்பட்டு வருகிறது. இதனிடையே தன் மீதான வழக்குகளை எதிர்கொள்ள ட்ரம்புக்கு 800 கோடி ரூபாய் வரை தேவைப்படும் என அவரது சட்ட நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், நிதி நெருக்கடியைச் சமாளிக்க ட்ரம்ப் தனக்கு விருப்பமான ஜெட் விமானத்தை விற்று விட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. 10 மில்லியன் டொலர் (சுமார் 83 கோடி ரூபாய்) மதிப்புடைய 1997 செஸ்னா ஜெட் விமானத்தை ஈரானிய - அமெரிக்க கட்டுமான மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவரான மெஹர்தாத் மொயதியிடம் ட்ரம்ப் விற்பனை செய்ததாகக் கூறப்படுகிறது. (எ)

# இஸ்ரேல் படைகள் வெளியேறாதவரை போர் நிறுத்தப் பேச்சுக்கு இடமில்லை

## ஹமாஸ் அறிவிப்பு! அச்சம் அதிகரிப்பு

காஸா, மே 30

ரபாவிலிருந்து இஸ்ரேல் படைகள் வெளியேறாதவரை போர் நிறுத்தம், பணயக் கைதிகள் விடுதலை தொடர்பான பேச்சுக்கு இடமில்லையென ஹமாஸ் அமைப்பு அறிவித்துள்ளது. இதனால் போர் தொடர்ந்தும் நீடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எகிப்துடனான ரபா எல்லையிலிருந்தும் ரபா நகரிலிருந்தும் இஸ்ரேலிய படைகள் வெளியேறினால் மட்டுமே போர் நிறுத்தப் பேச்சு நடைபெறும் என்று மத்தியஸ்தர்களிடம் (எகிப்து, கட்டார்) ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

காஸா முனையை நிர்வகித்துவரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்து பயங்கரத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

மேலும், இஸ்ரேலிலிருந்து 240 பேரை பணயக் கைதிகளாக காஸாமுனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர். இதையடுத்து ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் ஒப்பந்த அடிப்படையில் பணயக் கைதிகள் 100இற்கும் மேற்பட்டோரை மீட்டுள்ளது. மேலும், 128 பேர் இன்னும் பணயக் கைதிகளாக உள்ளதாகவும், அதில் சிலர் உயிரிழந்திருக்கலாம் எனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதனிடையே, பணயக் கைதிகளை மீட்கவும், ஹமாஸ் ஆயுதக்குழுவினரை ஒழிக்கும் நடவடிக்கையிலும் காஸா முனை மீது இஸ்ரேல் போர் தொடுத்துள்ளது. இந்தப் போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உட்பட 36 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அதேபோன்று மேற்குகரையில் ஏற்பட்ட மோதலில் 500இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அத்தோடு, காஸா முனை மீதான தாக்குதலை இஸ்ரேல் தீவிரப்படுத்தி வருகிறது. போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா, கட்டார், எகிப்து போன்ற நாடுகள் மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. ஆனால், இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான போர் நிறுத்த ஒப்பந்தம் தோல்வியில் முடிந்துவிட்டது.

மேலும், காஸா முனையில் முக்கிய நகராகவுள்ள ரபாவில் இஸ்ரேல் படைகளைக் குவித்து வருகிறது. எகிப்துடன் எல்லையைக் கொண்ட ரபாவில் இலட்சக்கணக்கான மக்கள் தஞ்சமடைந்துள்ளனர். அத்தோடு, எகிப்துடனான ரபா எல்லையில் இஸ்ரேல் படையினர் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். இதனால் எகிப்திலிருந்து ரபா எல்லை வழியாக காஸா முனைக்கு மனிதாபிமான உதவிகள், நிவாரணப் பொருட்கள் கிடைப்பது தடைப்பட்டுள்ளது.

# கிராமத்துக்குள் நுழைந்து பயங்கரவாதிகள் தாக்குதல்

## 7 பேர் பலி, 150 பேர் கடத்தல்

அபுஜா, மே 30



நைஜீரியாவின் நைஜர் மாகாணம் முன்யா நகரிலுள்ள கிராமத்துக்குள் நுழைந்த பண்டிட்ஸ் பயங்கரவாதிகள் கிராமத்தில் இருந்த உணவுப் பொருட்கள், பணம் உள்ளிட்டவற்றை கொள்ளையடித்தனர். இந்தப் பயங்கரவாதக் கும்பலைத் தடுக்க முயன்ற கிராமத்தினர் 3 பேர், அரசு ஆதரவு பெற்ற ஆயுதக்குழுவினர் 4 பேர் கொல்லப்பட்டனர்.

இதன்பின்னர் கிராம மக்கள் 150 பேரை பயங்கரவாதிகள் கடத்திச் சென்றனர். இதையடுத்து அந்த கிராமத்துக்கு விரைந்து சென்ற பாதுகாப்புப் படையினர், கடத்தப்பட்டவர்களைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

நைஜீரியாவில் ஐ. எஸ்., அல்கொய்தா, போகோ ஹராம் போன்ற பயங்கரவாத அமைப்புகளும், பல்வேறு கிளர்ச்சி குழுக்களும் செயல்பட்டு வருகின்றன.

கொள்ளை, கொலை, பணத்துக்காக பொதுமக்கள், சிறார்கள், கால்நடைகளைக் கடத்தும் செயலில் ஈடுபடும் “பண்டிட்ஸ்” என்ற கும்பலும் செயல்பட்டு வருகிறது. இந்த பண்டிட்ஸ் கடத்தல் கும்பலை நைஜீரிய அரசாங்கம், பயங்கரவாத அமைப்பாக அறிவித்துள்ளது. இந்தக் குழுக்கள் பொதுமக்கள், பாதுகாப்புப் படையினரை குறிவைத்து அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றன. (எ)

# துப்பாக்கியுடன் சீன இராணுவத்தில் ரோபோ நாய்

பீஜிங், மே 30



கம்போடியாவுடன் இணைந்து முன்னெடுத்த இராணுவப் பயிற்சியின் போது, சீன இராணுவம் ரோபோ நாயை அறிமுகப்படுத்தியதாக செய்தி வெளியாகியுள்ளது.

மேம்படுத்தப்பட்ட அதிநவீன ரோபா நாயின் முதுகில் நீண்ட இயந்திரத் துப்பாக்கி பொருத்தப்பட்டுள்ளது. செல்லும் வழியிலுள்ள தடைகளை எளிதாகக் கண்டறிந்து அதற்கேற்ப நகர்ந்து எதிரிகளின் இலக்கை நோக்கித் தாக்கும் வகையில் இந்த ரோபோ நாய் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ரோபோ நாய் தொடர்பான வீடியோவை சீன அரசு ஊடகம் வெளியிட்டுள்ளது.

“இது நமது போர் நடவடிக்கைகளில் ஒரு புதிய உறுப்பினராகச் செயல்படும். உளவு பார்த்து எதிரிகளை அடையாளம் கண்டு, இலக்கைத் தாக்கவும் நமது வீரர்களுக்குப் பதிலாக இந்த ரோபோக்களைச் சேர்க்க முடியும்” என்று சீன இராணுவம் தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல தொழிலாளருக்கும் 55 வயதின் பின் சமூக பாதுகாப்பு நிவாரணம் வழங்கப்படும்

## அமைச்சரவை அனுமதி என்கிறார் அமைச்சர் மனுஷ



கொழும்பு, மே 30

பலதரப்பட்ட தொழில் துறைகளிலும் பணியாற்றும் 55 வயது நிறைவடைந்த அனைத்து தொழிலாளர்களுக்கும் சமூக பாதுகாப்பு நிவாரணம் வழங்குவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

"கருசரு" வேலைத்திட்டத்துக்கு இணையாக செயல்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்துக்கான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், மக்களுக்கு பண்டிகைகளைக் கொண்டாட மன நிம்மதி இல்லை என்று சிலர் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் வெசாக், பொசன் பண்டிகைகளை மாத்திரமன்றி நத்தார் பண்டிகையையும் கொண்டாடுவதற்கு தேவையான சூழலை உருவாக்கியது. இதனால் குற்றச்சாட்டுக்களை முன்வைப்போர் கடந்த வருடத்துடன் தற்போதைய நிலையை ஒப்பிட்டுப் பாருங்கள் என்றே சொல்வேன். மக்கள் இழந்திருந்த மன நிம்மதி மீட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தை சாடும் எவரிடத்திலும் சரியான பொருளாதாரத் திட்டமொன்று இல்லை. அப்படியொரு வேலைத்திட்டம் இருந்தால் முன்வையுங்கள், நாங்கள் சொன்னதை செய்துக் காட்டிக் கொண்டிருக்கிறோம். அஸ்வெசும, உறுமய உள்ளிட்ட திட்டங்கள் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் இருந்தாலும் இதற்கு முன்னர் அவர் ஜனாதிபதியாக இருந்ததில்லை. அவர் முதன்முறையாக பதவியேற்றதில் இருந்து பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார். 25வீதமாகக் காணப்பட்ட வங்கி வட்டி இன்று 12ஐ - 8ஐ ஆகக் குறைந்துள்ளது - என்றும் கூறினார். (ஐ)



# முதலாவது ஸ்ரோபெரி செய்கை கிராமம் நுவரெலியாவில் அமைப்பு

கொழும்பு, மே 30

நாட்டின் முதலாவது ஸ்ரோபெரி செய்கை முன்மாதிரி கிராமம் நுவரெலியாவில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் அமைக்கப்பட்டுள்ளது.

நுவரெலியாவில் உள்ள 4 கிராமங்களை அடிப்படையாக கொண்டு இந்த ஸ்ரோபெரி உற்பத்தி முன்மாதிரி கிராமத்தை அமைப்பதற்கு விவசாய அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இரண்டு கோடி ரூபாய் செலவில் 50 விவசாயிகளை பயன்படுத்தி 42 காப்பக வீடுகளில் இந்த ஸ்ரோபெரி உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு தேவையான நிதிவளம், செய்கைக்கான ஸ்ரோபெரி செடிகள் உட்பட செய்கை நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் தொழில்நுட்ப வளங்கள் மற்றும் நீர்வளம் என்பவற்றை கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ரஷ்யாவுக்கு அனுப்புவதாகக்கூறி 140 பேரை ஏமாற்றிய மூவர் கைதாகினர்!

கொழும்பு, மே 29

ரஷ்யாவுக்கு அனுப்புவதாக கூறி 140 பேரை ஏமாற்றி பணம் பெற்ற மூவர் கொழும்பு - மொறட்டுவை தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் சாரதி பயிற்சி நிலையம் நடத்துபவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையத்தை சோதனையிட்டபோது 39 பேரின் கடவுச் சீட்டுகள் மற்றும் போலி ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

ரஷ்யா செல்ல விரும்பியோரிடம் 6 இலட்சம் முதல் 14 இலட்சம் ரூபாய் வரை பணத்தை சந்தேகநபர்கள் பெற்றுள்ளனர்.

கைதான மூவரும் கொழும்பு - மொறட்டுவையை சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# பட்டமளிப்பு விழாவை பிற்போடுவது மாணவரின் உரிமையை மீறுவதாகும்

## பேராதனை பல்கலை. பீடாதிபதி கடிதம்

கண்டி, மே 30

கல்வி சாரா ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக பட்டமளிப்பு விழாவை பிற்போடுவது இளங்கலை மாணவர்களின் உரிமைகளை மீறுவதாகும் பேராதனை பல்கலைக்கழக கலைப் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி பிரபாத் ஏகநாயக்க எழுத்து மூலம் துணைவேந்தருக்கு அறிவித்துள்ளார்.

அதில் மேலும் கூறியிருப்பவை வருமாறு,

பல்கலைக்கழகத்தின் மிக முக்கிய கல்வி நிகழ்வான பட்டமளிப்பு விழா ஒரு சிலரின் தன்னிச்சையான நடவடிக்கையால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் மிகுந்த அதிர்ச்சி அடைந்துள்ளேன்.

இந்த முடிவு எங்கள் மதிப்புமிக்க பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளின் உரிமைகளை கடுமையாக மீறுகிறது என்று நான் நம்புகிறேன். கல்வி சாரா ஊழியர் சங்கங்களின் தலைவர்கள் என்று கூறிக்கொள்ளும் தொலைநோக்கு பார்வையற்றவர்களே இந்த நிலைக்கு முழுப் பொறுப்பு. இந்நிலைமையை கல்விசாரா ஊழியர்களும் பல்கலைக்கழக நிர்வாகமும் கண்டிக்க வேண்டும்.

கல்வி சாரா ஊழியர் சங்க தலைவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் பீடாதிபதிகளாகிய நாமும் இந்த மனித உரிமை மீறலின் அங்கமாகி விடுவோம்.

பட்டமளிப்பு விழா போன்ற மிக முக்கியமான விழாவை ரத்து செய்ய வற்புறுத்திய பல்கலைக்கழக நிர்வாகமும் ஊழியர்களின் தொழிற்சங்கமும் மருத்துவ பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "பனந்தருவை" இசை நிகழ்ச்சிக்கு ஆதரவளித்தன. ஆனால், அவை எந்த அடிப்படையில் என்பதை புரிந்து கொள்வது கடினம்.

எனவே, பட்டமளிப்பு விழாவை சீர்குலைக்கும் நபர்களை சட்டத்தின் முன் நிறுத்தி, இது தொடர்பாக பல்கலைக்கழக நிருவாக மன்றக்குழுவுக்கு உரிய முறையில் தகவலை தெரிவித்து, மேல் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்- என்றுள்ளது. (ஐ)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, மே 30

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் கம்பஹாவில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

57 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபரின் வீட்டை முற்றுகையிட்டபோது மறைத்து வைத்த துப்பாக்கியை பொலிஸார் கைப்பற்றினர். இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டார். (ஐ)

# 24,645 டெங்கு நோயாளர் 5 மாதங்களில் அடையாளம்!

கொழும்பு, மே 30

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 24 ஆயிரத்து 645 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்திலேயே அதிக தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொழும்பில் 5 ஆயிரத்து 289 நோயாளர்களும் கம்பஹாவில் 2 ஆயிரத்து 309 நோயாளர்களும் களுத்துறையில் 1,307 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோய் பரவக்கூடிய அபாயம் இருப்பதாகவும் இதனால் பொதுமக்கள் அனைவரும் தங்களின் சுற்றுச்சூழலைச் சுத்தமாக வைத்திருக்குமாறு அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# தேர்தல்கள் ஆணைக்குழுவை சந்தித்தார் அமெரிக்க தூதுவர்

கொழும்பு, மே 30

இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கக்கும் இடையில் விசேட சந்திப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த சந்திப்பு தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், தனது எக்ஸ் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

"தேர்தலுக்கான திட்டங்கள் மற்றும் வெளிப்படையான செயல்முறையை நிலைநிறுத்துவது குறித்து தேர்தல் ஆணைக்குழுவுடனான சந்திப்பு பாராட்டுக்குரியது. இலங்கை, அமெ



ரிக்கா மற்றும் பல நாடுகள் இந்த ஆண்டு தேர்தலை எதிர்கொள்வதால், ஜனநாயக ஆட்சியின் தூணாக சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களில் வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து நாங்கள் கருத்துகளை பரிமாறிக்கொண்டோம்." என்றுள்ளது. (ஐ)

# மாணவியின் அந்தரங்க படங்களை வலைதளங்களில் பதிந்தவர் கைது

கொழும்பு, மே 30

மாணவியின் அந்தரங்க ஒளிப்படங்களை சமூக ஊடகங்களில் பதிவிட்டார் என்று கூறப்படும் இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

17 வயது சிறுமியுடன் குறித்த இளைஞர் காதல் தொடர்பை பேணியிருந்தார். இந்த காதல் உறவு முறிந்ததை அடுத்தே மாணவியை பழிவாங்கும் நோக்கில் அவரின் அந்தரங்க படங்களை சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் நண்பர்கள் மூலம் அறிந்த மாணவி கொழும்பு - நுகேகொடை பொலிஸில் முறைப்பாடு அளித்ததன் அடிப்படையில் பொலிஸார் இளைஞரை கைது செய்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் விடயத்தில் இலங்கைக்கு முன்னுரிமை!

## – பிரிட்டன் அரசாங்கம் தெரிவிப்பு

லண்டன், மே 30

மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை பிரிட்டனின் முன்னுரிமைக்குரிய நாடாக விளங்குகின்றது என பிரிட்டனின் பொது நலவாய வெளிவிவகார அபிவிருத்தி அலுவலக இராஜாங்க அமைச்சர் மேரி டிரெவல்யன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நல்லிணக்கம் தொடர்பில் பிரிட்டன் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையின் நல்லிணக்க பொறிமுறை குறித்து பாதிக்கப்பட்ட சமூகத்தினர் வெளியிட்டுள்ள குறிப்பிடத்தக்க சந்தேகங்களை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம்.

நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்காக அனைவரையும் உள்வாங்கிய நடைமுறையின் அவசியத்தை பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது.

எந்த பொறிமுறையும் சுயாதீனமானதாக - அர்த்தபூர்வமானதாக - பாதிக்கப்பட்ட சமூகங்களின் நம்பிக்கையை பெறக்கூடியதாக காணப்படவேண்டும். முன்னைய நிலைமாறுகால செயல்பாடுகளின் தொடர்ச்சியாகவும் பொறுப்புக்கூறலுக்கான பாதைகளை வழங்குவதாகக் காணப்பட வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

## மாணவர்களை...

தவணைப் பரீட்சைகள் நடைபெறுகின்றன. இதில், வடக்கு மாகாண பாடசாலைகள் சிலவற்றில் ஒரேநாளில் மாகாண கல்வித் திணைக்களத்தினதும், தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினதும் பரீட்சைகள் நடைபெறுகின்றன. இத னால், ஒரேநாளில் வெவ் வேறு பாடங்களுக்கான பரீட்சைகளை மாணவர்கள் எழுத நிர்ப்பந்திக்கப் படுகின்றனர் என்று அறிய வருகின்றது.

இது தொடர்பாக ஈழநாடு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இந்த வருடம் சம நேரத்திலே வந்து மாகாண கல்வித் திணைக்களத்தின் பரீட்சையும் அது முடிய தொண்டைமனாறு வெளிக்கள நிலையத்தின் பரீட்சையும் ஒரு சில பாடசாலைகளில் நடத்தப்பட்டுள்ளன. வவுனியாவில் இரண்டு பாடசாலைகள் தொடர்பில் இவ்வாறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மானிப்பாய் பகுதியிலுள்ள ஒரு மகளிர் பாடசாலை தொடர்பாகவும் முறைப்பாடு கிடைக்கப்பெற்றது. இதேபோன்று, யாழ்ப்பாணத்திலும் பிரபலமான பாடசாலை ஒன்று இவ்வாறு பரீட்சையை நடத்துவதாக தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

மாணவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு பரீட்சைகளையும் நடத்துவது உளவியல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்தும். இதேவேளை, மாகாணத்தின் பரீட்சை ஒன்று நடைபெறும்போது வெளிப் பரீட்சையையும் ஊக்குவிக்கும் முகமாக அரச பாடசாலை நேரத்தில் ஓர் அரச சார்பற்ற நிறுவனத்தின் பரீட்சைகளை வைப்பது என்பது தாபன விதிமுறைகளுக்கு முற்றிலும் முரணான ஓர் ஏற்பாடு. இத்தகைய முறைகேடுகளை மாகாண கல்வி அமைச்சும், மாகாண கல்வித் திணைக்களமும் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பது மிகப்பாரதூரமான விடயம்.

எனவே, இந்த முறைகேடுகள் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் மாகாண கல்வித் திணைக்களத்தில் முறையிட்டுள்ளது. இது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கத் தவறும் பட்சத்தில் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## நிறைவேற்றதிகார...

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றவும் 30 வருட யுத்தத்தை வெற்றி கொள்ளவும் முடிந்தது என்றும் ஜனாதிபதி கூறினார்.

இளம் சட்டத்தரணிகளுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு பொறுப்புக்கூறும் வகையில் சட்டத்தை நிறைவேற்றவேண்டும். தற்போது நிறைவேற்று அதிகாரத்தின் பல பிரிவுகள் மாகாண சபைகளுக்கும் பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்களை பாராளுமன்றத்துக்கு பகிர்ந்தளிப்பதற்கான சட்டம் நிறைவேற்றப்படும்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாகவும் அதில் வென்று ஜனாதிபதியாக போவதாகவும் சொல்லும் எந்தவொரு வேட்பாளரும் நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதாக இதுவரை அறிவிக்கவில்லை. அதனால் பாராளுமன்றத்தை பலப்படுத்தும் வேலைத் திட்டத்தை தயாரிக்க வேண்டியது அவசியம்.

இப்போதும் மாகாண சபைக்கு நிறைவேற்று அதிகாரங்கள் சில வழங்கப்பட்டுள்ளன. மற்றொரு பகுதி பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இன்னும் சில சட்டங்கள் கொண்டுவரப்பட்ட பின்னர் அந்த அதிகாரம் பாராளுமன்றத்துக்கு பிரிந்து செல்லும். ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு பொறுப்புக்கூறும் வகையில் சட்டங்களை நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும் - என்றும் சொன்னார்.

## வடக்கில்...

எம். சார்ள்ஸை கனடாவின் சர்வதேச அபிவிருத்திகளுக்கான பிரதி அமைச்சர் கிறிஸ்தோபர் மக்லெனன், இலங்கைக்கான கனடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ் உள்ளிட்ட குழுவினர் நேற்று சந்தித்து கலந்துரையாடினர். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

நல்லிணக்க செயல்பாடுகள், மீள்குடியேற்றம், கண்ணிவெடி அகற்றல், காணி விடுவிப்பு, கல்வித்துறை மேம்பாடு, தொழில் முனைவோருக்கான ஒத்துழைப்புகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கல்வி முறையில் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டும் என தெரிவித்த ஆளுநர், அதற்கான மாதிரி செயற்பாடுகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் கூறினார். ஜனாதிபதி கடந்த வாரம் வடக்குக்கு வந்தபோது மருத்துவமனைகளுக்கான புதிய பிரிவுகளை திறந்துவைத்ததுடன், பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்களையும், மக்களுக்கான காணி உறுதிகளையும் வழங்கி வைத்தார். இதனூடாக வடக்கு மாகாண மக்களுக்கு சிறந்த கல்வி மற்றும் சுகாதார சேவை மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

காணி உறுதிகளை வழங்கியமையால் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கும், பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கும் அதிக நன்மைகள் கிட்டும். தொழில் முயற்சியாளர்களுக்கான தொழில்நுட்ப ஒத்துழைப்புகளும், கடன் வசதிகளும் தேவைப்படுவதாகவும் ஆளுநர் கூறினார்.

இந்த விடயங்களைக் கேட்டறிந்த கனடிய தூதுக்குழுவினர் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்குத் தேவையான ஒத்துழைப்புகளை பெற்றுக்கொடுக்க தாம் தயாராகவுள்ளனர் என்று தெரிவித்தனர். (ஐ- எ)

## கசிப்பு அருந்திய...

உயிரிழந்தவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட் டுள்ளன என்றும் அறிக்கை கிடைத்த பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் கசிப்பு காய்ச்சியவர்கள் ஏற்கனவே பல தடவைகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றால் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-எ)

## பசுமை ஐதரசன்...

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நேற்று நடந்த "வலுசக்தி மாற்றத்தின் எதிர்காலப் பாதை" எனும் தலைப்பில் இடம்பெற்ற வட்டமேசை மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்காக செயல்படும் இலங்கை தற்போது புதிய பொருளாதார கட்டமைப்பில் கவனம் செலுத்தியுள்ளது. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பசுமைப் பொருளாதாரமாக மாறுவதே எமது நோக்கமாக உள்ளது. அதிக போட்டித்தன்மை கொண்ட ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக அது இருக்க வேண்டும்.

நாம் ஏற்கனவே, அந்த நடவடிக்கைகளைத் திட்டமிட்டுள்ளதுடன் பொருளாதாரத்தின் சில புதிய துறைகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்போது, இலங்கையில் கிடைக்கும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் பசுமை ஐதரசன் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையில் இலங்கை முன்னணியில் வருவதற்கான அதிக சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது.

மேலும், இலங்கையின் உலர் வலயப் பிரதேசத்தில் காற்றாலை வலுசக்தி உற்பத்திக்கான சாத்தியக்கூறுகளுடன், அத்துறையில் விரைவான அபிவிருத்தியை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். இது பூச்சிய உமிழ்வு நிலையை அடைவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்புக்கு இணங்குவதுடன், 2040ஆம் ஆண்டளவில் இந்த இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சுக்கு ஏற்கக்கூடிய பல திருத்தங்களுடன் இரண்டு நாட்களுக்கு முன்பு உயர் நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட மின்சார சீர்திருத்த சட்ட மூலத்தை நாம் ஏற்கனவே முன்வைத்துள்ளோம். எதிர்வரும் மாதத்தில் இந்த சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் விவாதித்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், கடலுக்கு அடியில் புதிய கேபிள் இணைப்புகள் கட்டமைக்கப்பட்டு அதனூடாக மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. இதன்படி அவுஸ்திரேலியா - சிங்கப்பூர் , சிங்கப்பூர் - இந்தியாவுக்கும் இடையேயான இணைப்புகள் ஏற்படுத்தப்படவுள்ளன. கடலுக்கு அடியில் உள்ள இந்தியா - சிங்கப்பூர் கேபிளை இலங்கையுடன் இணைக்க வாய்ப்பு உள்ளது. பசுமை ஐதரசனை பயன்படுத்தும் பட்சத்தில் வலயத்தின் நீண்டகால விநியோக இலங்கை மத்தியஸ்தானமாக மாறுவதற்கான சாத்தியங்கள் உள்ளன.

பசுமை ஐதரசன் வளங்கள் நிறைந்த பகுதிக்கு அருகில் திருகோணமலை, அம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு ஆகிய மூன்று துறைமுகங்கள் நம்மிடம் உள்ளன. இந்தியாவுடன் தரைவழிப் பாதை மற்றும் தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே தரைவழி இணைப்பு குறித்தும் ஆலோசித்து வருகிறோம். அதனால் தென்னிந்தியாவை அண்மித்து செல்லும் வாய்ப்பு எமக்கு கிடைக்கும். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வலுசக்தி தொடர்பை பலப்படுத்துவது குறித்து நாம் ஏற்கனவே ஆலோசித்து வருகிறோம். இவை அனைத்தும் சரியாக நடைபெறும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க வளங்களைப் பயன்படுத்துவதற்கான வரையறை மற்றும் சாத்தியங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது - என்றார்.

## இந்திய பயங்கர...

யுள்ளார். இந்த நிலையிலேயே இந்தியாவின் குஜராத் மாநில பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸார் இலங்கை வரவுள் ளனர்.

இதேநேரம், ஜெராட்டை தேடப்படும் குற்றவாளியாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாளை...

**www.doenets.lk> www.results.exams.gov.lk** என்ற பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளங்கள் மூலம் பார்வையிட முடியும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

## மயிலத்தமடுவில்...

சிவயோகநாதன் தெரிவித்தார்.

இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராக தமிழ் மக்கள் தொடர் போராட்டத்தை ஆரம்பித்து 270 நாட்கள் கடந்துவிட்டன - பிரச்னை இன்னும் நீள்கிறது. மாதவனையில் தமிழர்களை போன்று கால்நடைகளும் காணாமல் ஆக்கப்படுகின்றன. சட்டவிரோதமாக மின்சார வேலியை அமைத்து கால்நடைகள் கொல்லப்படுகின்றன. உணவுக்குள் வெடிபொருட்களை வைத்தும் - துப்பாக்கியால் சுட்டும் - வெட்டியும் கால்நடைகளை கொல்கிறார்கள். இதுவரை 400இற்கும் மேற்பட்ட கால்நடைகள் கொல்லப்பட்டுள்ளன. மேய்ச்சல்தரை பறிபோனதால் கால்நடைகளுக்கு உணவளிக்க முடியவில்லை. ஆயிரத்து 400இற்கும் மேற்பட்ட கால்நடைகள் உணவின்றி உயிரிழந்தன. பண்ணையாளர்களும் ஆக்கிரமிப்பாளர்களால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றனர். அவர்களை பொலிஸார் கைது செய்கின்றனர்.

வனஜீவராசிகள் திணைக்களம், வனவளத் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவை மாதவனைக்கு உரிமை கோருகின்றன. இவை அனைத்தும் தமிழ் பண்ணையாளர்களை வஞ்சிக்கின்றன.

மட்டக்களப்பில் 7 இலட்சம் கால்நடைகள் உள்ளன. மாதவனையில் மட்டும் 3 இலட்சம் கால்நடைகள் உள்ளன. பெரும்போக செய்கையின்போது ஒரு இலட்சம் கால்நடைகள் மாதவனைக்கு மேய்ச்சலுக்கு செல்கின்றன. இவை உணவின்றி தவிக்கின்றன. இதனால், பால் உற்பத்தி பல மடங்கு குறைந்துவிட்டது.

ஜனாதிபதி மாதவனை தொடர்பில் விடுத்த உத்தரவு நடைமுறைப்படுத்தப்படவில்லை. நீதிமன்றங்களின் கட்டளைகள் கூட புறக்கணிக்கப்படுகின்றன.

மாதவனையில் குடியேறியோர் எமது கால்நடைகளை அழிக்கின்றனர். இராணுவம், பொலிஸாரின் உதவியுடன் இந்த அக்கிரமங்களை அவர்கள் முன்னெடுக்கின்றனர். கடந்த 6 மாதங்களாக பால் கறக்க முடியாத நிலையில் பண்ணையாளர்கள் உள்ளனர். போதிய உணவின்றி கால்நடைகள் உயிரிழக்கின்றன. இங்கு வளர்க்கப்படும் கால்நடைகள் பல தலைமுறைகளாக இங்கேயே வாழ்பவை. அவற்றுக்கு ஏற்றவிதத்தில் புதிய இடங்களை கண்டுபிடிக்க முடியாது. மயிலத்தமடுவில் கால்நடைகளுக்கான அனைத்து வளங்களும் உள்ளன. இது வேறு இடத்தில் கிடைக்காது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே நோக்கம்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 30

**சீரற்ற - அவசர கால சூழ்நிலைகளின் போது பாதுகாப்பான பாடசாலை சூழலை உறுதி செய்வதன் மூலம் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பில் முக்கிய கவனம் செலுத்துவதே எமது அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். - இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் செவ்வாய்க்கிழமை நடந்த ஊடகச் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள், கல்வி, சுற்றாடல் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட அரச உயர் அதிகாரிகளுடன் அனர்த்த முகாமைத்துவ முன்னேற்பாடுகள் தொடர்பில் தனித்தனியாகக் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் பின்னர், ஊடகவியலாளர்களைச் சந்தித்த இராஜாங்க அமைச்சர், அவசர கால சூழ்நிலைகளைத் திறம்பட எதிர்கொள்வதற்கான முறையான செயல் திட்டங்களைத் தயாரித்தல், அனர்த்த மதிப்பீடுகளை மேற்கொள்ளல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலைய நடவடிக்கைகளை மேற்பார்வையிடவும் மாவட்ட குழுக்களைப் புதுப்பித்துச் செயல்படுத்தல் போன்ற விடயங்களில் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டதாக தெரிவித்தார்.

மேலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அரச நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து பாடசாலைகளின்



பழைய மாணவர் சங்கங்கள் மற்றும் பெற்றோர், ஆசிரியர் சங்கங்களின் தீவிர பங்களிப்புடன் உரிய பாடசாலை அதிபர்களின் கீழ் விசேட பாடசாலைக் குழுக்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், பாடசாலை மட்டத்தில் அனர்த்த முன்னெச்சரிக்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் குறைந்தபட்சம் இரண்டு ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அடிப்படை முதலுதவி பயிற்சி அளிப்பதுடன், பாடசாலைகளில் முறையான முதலுதவி பெட்டிகள் கிடைப்பதை உறுதி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது, அவசர கால சூழ்நிலைகளில் பாடசாலை மாணவர்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்தத் திட்டங்கள் தொடர்பாக சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்வது குறித்தும் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டது.

இதேவேளை, அவசரகால அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளின் போது எதிர்நோக்கும் சில சட்ட ரீதியான சிகிச்சைகளை வழங்குவதற்குத் தேவையான தீர்வுகளை எடுப்பதற்குப் பல அமைச்சுக்களுடன் ஆலோசனைகளை நடத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார். (எ)

# சீரற்ற காலநிலையினால் 171 குடும்பங்கள் பாதிப்பு

ஹற்றன், மே 30

மலையகத்தில் தொடரும் கன மழை மற்றும் பலத்த காற்றுடன் கூடிய சீரற்ற காலநிலையால் நுவரெலியா மாவட்டத்தில் 171 குடும்பங்களைச் சேர்ந்த 623 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் நிமல் பண்டார தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையால் நுவரெலியா மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகப் பிரிவுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இங்கு 159 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் அவர்களது உறவினர்களின் வீடுகளில் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அதேவேளை சிறிய பாதிப்புக்கள் ஏற்பட்ட குடியிருப்புக்களைச் சேர்ந்த சிலர் அதனை தற்காலிகமாகத் திருத்திக்கொண்டு அதே குடியிருப்புக்களில் தங்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களைக் கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான உதவிகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு நுவரெலியா மாவட்ட செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் நிமல் பண்டார மேலும் தெரிவித்தார். (எ)

# 26 நாட்களில் 96 ஆயிரத்து 890 சுற்றுலாப்பயணிகள் வருகை

கொழும்பு, மே 30

மே மாதம் முதலாம் திகதி முதல் 26 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 96 ஆயிரத்து 890 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தரவுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

2024 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 8 இலட்சத்து 81 ஆயிரத்து 541 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த நிலையில், மே மாதத்தின் முதல் 26 நாட்களில் 28.1 சதவீதமான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்தியாவிலிருந்து 27 ஆயிரத்து 274 சுற்றுலாப் பயணிகளும் மாலைதீவிலிருந்து 7,620 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியிலிருந்து 6,938 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து 6, 935 சுற்றுலாப் பயணிகளும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

# தீவிரமடைந்து வரும் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் போராட்டம்!

கொழும்பு, மே. 30

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் முன்னெடுத்துள்ள பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் 28 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பளம் 15 வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளமை, கல்விசாரா ஊழியர்களின் மாதாந்தக் கொடுப்பனவு அதிகரிக்கப்படாமை ஆகிய செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் 17 அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் 17 உயர்கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக நாட்டின் பல்கலைக்கழக கட்டமைப்பில் உள்ளக மற்றும் வெளிவாரியாக கல்வி கற்கும் சுமார் 2 இலட்சம் மாணவர்கள் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக கற்றல் நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. மேலும் குழுக்களை நியமிப்பதன் மூலம் பிரச்னைக்கு தீர்வு காண முடியாது எனவும் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தொழிற் சங்க குழு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# போலி முகநூல் பதிவுக்கு எதிராக வழக்கு தாக்கல்

திருகோணமலை, மே 30

திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் கோணேசர் ஆலய வழக்குத் தொடர்பில் விமர்சித்த போலி முகநூல் பதிவொன்றுக்கு எதிராக நேற்றுப் புதன்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கனகநாயகம் விஜயநாதனால் 2024 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் பிரிவு 26 (1) இல் உள்ள ஏற்பாடுகளின் கீழ் குறித்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மெய்யுறுதிப்படுத்தப்படாத முகநூல் கணக்கைப் பயன்படுத்துபவரது அல்லது நிர்வகிப்பவரது ஆள் அடையாளம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். குறித்த முகநூல் கணக்கு பயன்படுத்தப்படும் அமைவிடம் அவற்றோடு தொடர்புடைய ஏனைய நிகழ்வுகள் பற்றிய விடயங்கள் மனுதாரரால் எதிர்காலத்தில் தாக்கல் செய்யப்படவுள்ள வழக்குக்கு அவசியமாக உள்ளமையால் மன்றானது தனது நியாயாதிக்கத்தை பிரயோகித்து முகநூல் நிறுவனத்திடமிருந்தும், டயலொக் நிறுவனத்திடமிருந்தும் மேற்குறித்த விடயங்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய விபரங்களை உடனடியாக பெறுவது அவசியம்.

எனவே, இவற்றை உடனடியாக நீதிமன்றத்துக்கு சமர்ப்பிப்பது தொடர்பாகவும் தேவையானதும், அவசியமானதுமான நடவடிக்கைகளை எடுக்குமாறு கொழும்பு 01இல் செயல்படுகின்ற குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் கணனிக் குற்றங்கள் விசாரணைப் பகுதியின் சமூக ஊடகப் பிரிவின் பணிப்பாளருக்கு மேற்குறித்த விவரங்கள் மற்றும் நிகழ்வுகளை உடனடியாகப் பெறுவது தொடர்பாகவும் அவற்றை உடனடியாக நீதிமன்றத்துக்கு சமர்ப்பிப்பது தொடர்பாகவும், நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவிடுவதற்கான கட்டளையை பிறப்பிப்பிக்குமாறும் சட்டத்தரணி தனது சமர்ப்பணத்தில் வேண்டிக் கொண்டார்.

சிரேஷ்ட சட்டத்தரணியால் முன்வைக்கப்பட்ட சமர்ப்பணம், மனுதாரரின் மனு, சத்தியக்கடதாசி மற்றும் ஆவணங்கள் என்பவற்றை பரிசீலித்து அவற்றைக் கவனத்தில் எடுத்து மனுதாரர் தனது மனுவில் கூறியவாறு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா குறித்த கட்டளையைப் பிறப்பித்திருந்தார்.

நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் கீழ் ஆள் அடையாளம் உறுதிப்படுத்தப்படாத முகநூல் பதிவுக்கு எதிராக திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இரண்டாவது வழக்கு இதுவாகும். (எ)

# ரணிலின் சித்துவிளையாட்டு இம்முறை மக்களிடம் சரிவராது!

## ஜே. வி. பி. சொல்கின்றது

யாழ்ப்பாணம், மே 30

ரணில் விக்கிரமசிங்கவின் சித்து விளையாட்டு இந்த முறை தேர்தலில் சரிவராது - இவ்வாறு ஜே. வி. பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் ரா. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்களை இரு வருடங்களுக்கு ஒத்திவைப்பது தொடர்பா ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்த கருத்து தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

இதனை பாலித ரங்கே பண்டாராவின் கருத்தாக நாம் எடுத்துக் கொள்ள முடியாது. இது ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தாகும். இந்த முறை தேர்தலில் மக்களால் தான் விரட்டிக்கப்படலாம் என்ற சந்தேகத்தில் இவ்வாறான சித்து விளையாட்டுகளை அவர் செய்கின்றார்.

நாட்டை வாங்குரோத்தாக்கிய ரணில் - ராஜபக்ஷ அரசாங்கம் மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவதற்காக இவ்வாறான கருத்துகளை தெரிவித்து வருகின்றது. உண்மையிலேயே ஜனாதிபதி தேர்தலுக்குப் பயந்து இவ்வாறான கருத்துகளை ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்து வருகின்றது - என்றும் அவர் கூறினார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org